Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 25 09-07-94 சனிக்கிழமை ஓசை 141

## பட்டதாரிகள் நியமனம் ஜூலை 1 முதல் செல்லுபடியாகும்

எண்ணாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஜூலை 1 முதல் நியமனம் செல்லுபடியாகும் வகையில் அரசாங்க, தனியார் துறைகளிலும், வங்கிகளிலும் இவர்கள நியமனம் பெறுவர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தாமதமாகக் கிடைத்தாலும் ஜூலை 1 முதல் இவர்கள் நியமனம் செல்லுபடியாகும் எனவும் தெரிய வருகிறது.

# யாழ். மாவட்டத்தில் தேர்தலுக்கான உகந்த சூழ்நிலை தற்போது இல்லை

## மீனவர் விடுவிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட வயோதிப மீனவர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டு நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தார்.

பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த சின்னையா தங்கராசா (வயது 67) என்பவரே காங்கேசன்துறையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுப்பட்டியலில் போட்டியிடுமாறு தமிழ்க்குழுக்களிடம் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடத்தக் கூடிய உகந்த சூழ்நிலை இல்லையென பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். இதன் காரணமாக கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களை பொதுப் பட்டியல் ஒன்றில் போட்டியிடுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களான தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் ஈரோஸ் மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியவற்றின தலைவர்களை அழைத்துப் பேசியபோதே ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தமிழ்க் கட்சிகள அனைத்தும் இணைந்து இம் மாவட்டத்தில் பொதுப் பட்டியல் ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும எனக் கேட்டுக் கொண்டார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்கவும் கலந்து கொண்ட இச் சந்திப்பில் தமிழ்க் காங்கிரசும், தமிழர் விடுதலை கூட்டணியும் பிரதமரின் இக் கோரிக்கையை ஏற்க மறுப்புத் தெரிவித்து விட்டன எனினும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்கவை ஒரே பட்டியலை தாக்கல் செய்ய வைப்பது தொடர்பாக ஏனைய குழுக்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தும்படி பிரதமர் ரணில் பணித்துள்ளார்.

## வடக்கே தேர்தல் நடத்தாவிடில்

## கண்டியில் ஹமீட்

(கண்டி)

வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ் ஹமீட், எதிர் வரும் பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவிருப்பதாக தெரிய வருகிறது. தேசியப்பட்டியலில் இடம் பெறுவதாக இருந்த போதும் அவர் தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் ஹரிஸ்பத்துல தேர்தல தொகுதியில் போட்டியிடவிருப்பதாக மேலும் தெரியவருகிறது.

## வன்னி மனு வவுனியாவில் ஏற்பு

(வவுனியா)

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைக் கொண்ட வன்னி தேர்தல் மாவட்டத்திற்கான வேட்பு மனுக்கள் வவுனியா தேர்தல் அலுவலகத்தில் பெறப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கொழும்பு நகரில் புலிகளின் ஆறு தாக்குதல் பிரிவுகள்

### புலனாய்வு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

கொழும்பநகரில் விடுதலைப் புலிகளின் மேலும் ஆறு தாக்குதல் பிரிவுகள் நடமாடி வருவதாக சிறிலங்கா புலனாய்வு வட்டாரங்கள் கூறுகின்றன.

இப் பிரிவுகள் ஒவ்வொன்றும் மற்றைய பிரிவுகளை அறிய மாட்டா எனவும் ஆனால் அவற்றின் இலக்கு ஒன்றேயென்றும் அவ்வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன.

இவ்வாறான தாக்குதல் பிரிவுகளில் ஒன்றே அண்மையில் கொழும்பில் பிடிபட்டது எனவும் அவ்வட்டாரங்கள் கருதுகின்றன.

இத்தாக்குதல் பிரிவுகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும் படியும் புலனாய்வு வட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை தலைமையகத்திற்கு இரும்பு வேலிப் பாதுகாப்பு

### கரும்புலிகள் தாக்குதல் குறித்து அச்சம்

(கொழும்பு)

கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள விமானப்படை தலைமையகத்தை

டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இப்பகுதியின் அயலில் வசிக்கும் இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்கா

றும்படி மீண்டும் பாதுகாப்பு அதிகாரிகளை கோரியுள்ளனர். தலைமையகம் அங்கு தொடர்ந்திருப்பதை அவர்கள்

# வடக்கே தேர்தல் நடத்தாவிடில் அரசியலமைப்பு நெருக்கடி ஏற்படும்

(கொழும்பு)
யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் நடத்தப்படாவிட்டால் சிறிலங்காவில் அரசியல் அமைப்பு நெருக்கடி ஏற்படும் என்றும், இதனால் புதிய பாராளுமன்றத்தைக் கூட்ட முடியாத நிலை ஏற்படும் என்றும் கருதப்படுவதாலேயே சிறிலங்கா அரசு பாராளுமன்ற தேர்தலை யாழ்ப்பாண மாவட்டத்திலும் நடத்த முயற்சி மேற்கொள்வதாக பி.பி.சியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ்ஆர்னி கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், தெல்லிப்பழை போன்ற இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளிலும் தீவுப் பகுதிகளிலும் மட்டுமே வாக்களிப்பு நடத்தப்படக்கூடும் எனவும் தெரிவித்தார்.

# வடக்கில் தேர்தலை நிறுத்துமாறு த. வி. கூ. நீதிமன்றத்தில் வழக்கு!

(கொழும்பு)
வடக்கில் தேர்தல் நடத்தும் திட்டத்தை தடுத்து நிறுத்தும்படி கோரி தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

விடுதலைபபுலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் யாழ்ப்பாணம் இருப்பதால் அங்கே தேர்தலை நடத்துவது என்பது இயலாத காரியம் என அக்கட்சி தெரிவித்துள்ளது.

இப்போது யாழ் குடாநாட்டில் ஒரு சில தீவுகளையும் இரு பெரும் இராணுவ முகாம்களையும்தவிர ஏனைய பகுதிகள் அனைத்தும் புலிப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. இந்த இடங்களில் தான் அரசும் தேர்தலை நடத்தவுள்ளது இதில் சனத்தொகையில் 80 சதவீதத்தினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வாழ்கின்றனர் இவர்கள் வாக்களிக்க முடியாத நிலையை ஏறபடுத்தியுள்ளதாக கூட்டணி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

இப் பகுதியில் தேர்தல் பிரசாரம் கூட செய்ய முடியாதென்றும் நியமனப் பத்திரங்களை பெறும் அதிகாரி பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிக்குள் இருப்பதால் யாழ்ப்பாண வேட்பாளர்கள் தமது நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்ய முடியாது என்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு வர்த்தகரிடம் 8 கோடி தேர்தல் நிதி கோரினார்

## ரணில் மீது சு.க. உறுப்பினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)
இரண்டாயிரமாம் வருடம் வரை சிறிலங்காவில் வர்த்தகம் செய்ய வேண்டும் என நீங்கள் நினைத்தால் தேர்தலுக்கு நிதி உதவி செய்யவேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கொழும்பிலுள்ள வெளிநாட்டு வர்த்தகர்களிடம் கூறியுள்ளார்.

சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த எண்பது தொழில் அதிபர்களை இம் மாதம் நான்காம் திகதி பிரதமர் தனது இல்லத்திற்கு அழைத்து மேற் கண்டவாறு கூறியுள்ளதாக கம்பஹாமாவட்ட முன்னாள் சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஜெயராஜ் பெர்னான்டோ பிள்ளை தெரிவித்துள்ளார்.

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற வேண்டுமானால் எட்டுக் கோடி ரூபா தேவைப்படும் என்றும் இதனை இம் மாதம் 12-ம் திகதிக்கு முன்னர் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் ரணில் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இப்படியான உதவிகளை நீங்கள் செய்தால் மட்டுமே மேலும் ஆறு ஆண்டுகளுக்கு உங்கள் வர்த்தகத்தைத் தொடர்ந்து மேற் கொள்ள முடியும் என்றும் இல்லாது விட்டால் ஆட்சி மாற்றப்பட்டு நீங்கள் வெளியேற வேண்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

மாவட்டத்திற்கான வேட்பு மனுக்கள் வவுனியா தேர்தல் அலுவலகத்தில் பெறப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி, திருமதி புலேந்திரனையும், தமிழர் விடுதலைக் கூட்டணி சிவசிதம்பரத்தையும் முதன்மை வேட்பாளராக போட்டியிடவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

(கொழும்பு)
கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள விமானப்படை தலைமையகத்தை சுற்றி இரும்பிலான உறுதியான பெரும் மதில் ஒன்றை விமானப்படையினர் அமைத்து வருகின்றனர் விடுதலைப் புலிகள் கரும்புலித் தாக்குதலை நடத்துவதைத் தவிர்க்கவே இவ் வேற்பாடு என விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இப்பகுதியில் அயலில் வசிக்கும் இராஜாங்க அமைச்சர் ஏ ஜே. ரணசிங்கா உட்பட குடியிருப்பாளர்கள் விமானப்படை தலைமையகத்தை அங்கிருந்து அகற்

அதிகாரிகளை கோரியுள்ளனர். தலைமையகம் அங்கு தொடர்ந்திருப்பதை அவர்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

# ஐ. நா. அலுவலகம் வியாழன்முதல் திறப்பு

(கொழும்பு)
கடந்தவாரம் வெள்ளிக்கிழமை மூடப்பட்ட கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் அமைந்திருந்த ஐ. நா அலுவலகம் கடந்த வியாழன்று மீண்டும் திறக்கப்பட்டது.

கரும்புலிகள் தினத்தையொட்டி இவ்வலுவலகம் அருகிலுள்ள விமானப்படை தலைமையகம் புலிகளால் தாக்கப்படலாம் என செய்திகள் வெளியானதையடுத்துமூடப்பட்டது தெரிந்ததே.

# கரும்புலிகள் தினத்தில் 15,000 பொலிசார் கடமை

(கொழும்பு)
கரும்புலிகள் தினமான கடந்த செவ்வாயன்று கொழும்பில் 15,000 பொலிசார் சேவையிலீடுபட்டிருந்ததாக பொலிஸ் தலைமையகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முதல் தினமான திங்கள் நள்ளிரவு முதல் கடும் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் வாகன நடமாட்டங்கள் கடுமையாக கண்காணிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# கொழும்பில் ஹேமாபோட்டி சஜீத்துக்கு இடம் இல்லை

(கொழும்பு)
கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் ஐ தே. க. சார்பில் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின்மனைவி ஹேமா பிரேமதாசாபோட்டியிடவுள்ளதாக ஜனாதிபதி செயலக பேச்சாளர் ஒருவர் பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பு மத்திய தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இவர் போட்டியிடவுள்ளதாக தெரிகிறது.

இதேவேளை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ள ஐ. தே. க. வேட்பாளர் மனுவில் பிரேமதாசாவின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு தமிழர்கள் கொழும்பில் கைது

## புலிகளுக்கு நெருக்கமானவர்களாம்

(கொழும்பு)
புலிகள் பற்றிய பத்திரிகைச் செய்திகளை நறுக்கி விடுதலைப்புலிகள் தலைவருக்கு அனுப்பி வந்த ஒருவர் கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார் அவருடன் குண்டு தயாரிப்பில் நிபுணத்துவமுடைய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நடைபெற்ற சுற்றிவளைப்பு சோதனையொன்றின் போது நான்கு பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் இவர்களில் மூவர் குண்டு தயாரிப்பு நிபு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# 8 மாவட்டங்களில் ஐ. தே. க. வேட்புமனுத் தாக்கல்

(கொழும்பு)
சிறிலங்காவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல கட்சிகள் நேற்று தமது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தன.

ஐக்கிய தேசியக் கட்சி எட்டு தேர்தல் மாவட்டங்களில் தனது வேட்பு மனுக்களை நேற்றுத் தாக்கல் செய்துள்ளது பிரதான எதிர்க் கட்சியாகிய பொதுஜன முன்னணி மாத்தளை மாவட்டத்தில் மட்டும் தனது வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளது.

இவை தவிர ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், மக்கள் சுதந்திர முன்னணி, ஈ. பி. ஆர். எல். எப். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட மற்றும் சில சுயேட்சைக் குழுக்கள் யாழ்ப்பாணம், வன்னி, பதுளை ஆகிய மாவட்டங்களில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன

இதேவேளை கொழும்பு, திகாமடுல்ல மொனறாகல ஆகிய மூன்று மாவட்டங்களிலும், ஆறு சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன

**கம்பஹா மாவட்டம்**

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்றுக் காலை கம்பஹா கச்சேரியில் தமது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். அமைச்சர் விஜேபால மென்டிஸ் நியமனப் பத்திரங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

புரியாணி வகைகள் மற்றும் நூடில்ஸ், சுவீற்ஸ் வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும் சம்பளம் திறமைக்கேற்ப வழங்கப்படும். ஹொட்டல் றொலெக்ஸ். 340 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், (8719)

## தோட்டக்காணி விற்பனைக்கு

மிருசுவில் சந்தைக்கும்வெப்பயஸ் விளையாட்டு மைதானத்திற்கும் கிழக்காக 1882 தொடக்கம் 112 வருடத் தொடர் உறுதியுடைய 21 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இராசநாயகம் மே/பா யோகம் அரிசி ஆலை தவசிகுளம், மிருசுவில். (8750)

## திடீர் பரிசோதனை

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவன தரக்கட்டுப்பாட்டுப் பகுதியினரும், சுகாதார சேவைகள் பகுதியைச் சேர்ந்த உணவு, மருந்து பரிசோதகரும் இணைந்து ஐஸ்கிறீம் தயாரிப்பு நிறுவனங்களில் திடீர் பரிசோதனைகளை நடாத்தி வருகின்றனர்.

இத்திடீர் பரிசோதனையின் போது மூலப்பொருட்கள் சுகாதாரக் கேடான முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதும், மனித பாவனைக்கு ஒவ்வாத பழுதடைந்த பழங்கள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எனவே இக்குறைபாடுகளை உடன் தவிர்க்கும்படியும், இவ்வறிவித்தலை உதாசீனம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

## குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன

பொது இடங்களில் குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் வகையில் ஊரெழு முத்தமிழ் சனசமூக நிலையம், கோப்பாய் யோகபுரம் அண்ணா சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் குழாய்க்கிணறுகள் அமைக்கும் பணியினை தேச நிர்மாணிகள் மேற்கொண்டுள்ளனர்.

பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டு நிதியின்

பொதுஜன ஐக்கிய முன்னணி

# இடஒதுக்கீடுகள் பூர்த்தியாக்கப்பட்டன

## வாசுதேவாவிற்கு இரத்தினபுரி வழங்கப்பட்டது

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ள கட்சிகளுக்கான இடஒதுக்கீடு தற்போதுமுடிவடைந்துவிட்டது சென்ற மாதம் 30-ம் திகதி இரவு 10மணி வரை இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்று பின்னரே இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

இலங்கைசமசமாஜகட்சிக்கு களுத்துறை, கொழும்பு கேகாலை ஆகிய மாவட்டங்களில் இரு இடமும், இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, கம்பஹா, கண்டி, காலி, மாத்தறை, பதுளை மாவட்டங்களுக்கு ஒரு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கம்யூனிஸ் கட்சிக்கு மாத்தறை, கொழும்பு, இரத்தினபுரி, ஆகிய மாவட்டங்களில் இரு இடங்களும், மொனறாகலை, குருநாகல், அம்பாந்தோட்டை, கம்பஹா கண்டி, நுவரெலியா, புத்தளம், காலி பதுளை மாவட்டங்களில் ஒரு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


இலங்கை மக்கள் கட்சிக்கு கொழும்பு, கம்பஹா, களுத்துறை, அம்பாந்தோட்டை, குருநாகல், புத்தளம், பொலநறுவை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் ஒரு இடமும் தேசவிமுக்தி மக்கள் கட்சிக்கு கம்பஹா மாவட்டத்தில் மட்டும் ஒரு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை நவசமசமாஜ கட்சியின் வாசுதேவநாணயக்காரவுக்கு இரத்தினபுரியில் மட்டும் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தெரிய வந்துள்ளது.

இதே வேளை ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணிக்கு கொழும்பு மாவட்டத்தில் மூன்று இடமும், களுத்துறையில் இரண்டு இடமும் கம்பஹா, அனுராதபுரம், மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை, கேகாலை, குருநாகல் ஆகிய மாவட்டங்களின் ஒரு இடமும் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

இதோ ஓர் அதிரடிச் செய்தி
ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா வழங்கும்
தோழமையுள்ள வெகுமதி
காவிச் செல்லும் உணவுப் பொட்டலங்கள்
07-07-94 முதல்
ரூபா 27.50 மட்டுமே
இறைச்சி / மீன் / மரக்கறி
எதுவானாலும்
பகல் 11.45 முதல் பிற்பகல் 3.45 வரை
எமது இனிய வாடிக்கையாளருக்கு ஓர் மின்னல் அதிரடி
ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்
ஒழுங்கை,
சுண்டுக்குளி.
உணவுத் தயாரிப்பில் அபார சாதனை
ஜெசித்தாரா
எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை.
(சி-9776)

## 24-வது பிறந்ததின நினைவஞ்சலி



மண்ணில் மலர்வு:
09 - 07 - 1970

வீரச்சாவு:
30 - 04 - 1991

வீரவேங்கை பரீந்திரன்

## கணித விஞ்ஞான வினாடி வினா

(தொல்புரம்)

யாழ். மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கணித, விஞ்ஞான வினா விடைப் போட்டிகள் இன்று காலை 9.00 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் வேளை இடம் பெறவுள்ள பரிசளிப்பு வைபவத்தில் வலயம் I இன் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி, வலயம் 2 இன் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி உட்பட மற்றும் பலர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்- அத்தோடு கல்வி மேம்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் அவர்கள் சிறப்புரை வழங்கவுள்ளார்- (41)

## பாரதியார் பாடலுக்கு தடை

(மட்டக்களப்பு)

தனது வீட்டு வைபவம் ஒன்றில் பாரதியாரின் விடுதலைப் பாடல்களை ஒலிபரப்பிய பாடசாலையின் அதிபர் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பாரதியார் பாடலில் பிரியமுள்ள கவிஞரான இந்த அதிபர், வீட்டு வைபவத்திற்காக பாரதியார் பாடல்களையே ஒலிபரப்பும்படி ஒலிபரப்பாளரை கண்டிப்பாக கேட்டிருந்தார். பாரதியாரின் அச்சமில்லை அச்சமில்லை என்ற பாடல் உட்பட பல பாரதியார் பாடல்கள் ஒலிபரப்பாகின.

வைபவங்கள் முடிந்து மறுநாள் அதிகாலை அதிபர் வீட்டிற்கு வந்த படையினர் நேற்று இயக்கப்பாடல்களை நீர் ஒலிபரப்பியதாக புகார் எமக்கு கிடைத்துள்ளது எனக் கூறி அவரை துருவித் துருவி விசாரித்தனர். அதிபர் விபரத்தை விளக்கிக் கூறி தப்பித்துக்கொண்டார்.

## சமுகம் தர கோரிக்கை

தேசிய கல்வி நிறுவன கல்வி டிப்புளோமா நெறியினை பயிலும் இந்துக் கல்லூரி நிலையத்தை சேர்ந்த முதலாம், இரண்டாம் வருட மாணவர்களை இன்று தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## 2ம் ஆண்டுநினைவலைகள்



# வலிமேற்கில் முத்திரையிடும் பணிகள் ஆரம்பம்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வர்த்தகர்களுக்கான நிறுவை, அளவை உபகரணங்களுக்கு 1994ஆம் ஆண்டிற்கான முத்திரையிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது சங்கானை உப அலுவலக பொது நூலகத்தின் முன்பாக நிறுவை அளவைப் பகுதியினரால் தராசு, படிகள் லிட்டர்கான்கள் போன்றவற்றிற்கு முத்திரையிடப்பட்டு வரப்படுகிறது. ஏற்கனவே ஆரம்பித்த இப்பணிகள் இந்த மாதம் 11, 12, 15ஆம் திகதி வரை சங்கானையில் தொடரவிருப்பதால் இதுவரை தமது உபகரணங்களுக்கு முத்திரையிடாதவர்கள் காலதாமதமின்றி வருகை தருமாறு கேட்கப்படுகின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தையும் தவற விட்டவர்கள் யாழ் கச்சேரியில் உள்ள நிறுவை அளவைப் பகுதிக்கே செல்லவேண்டி நேரிடும் எனவும், தமது நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடாமல் சட்டம் ஒழுங்குகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ். நிறுவை அளவைப் பகுதி பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## பரிசளிப்பு விழா

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி 158 ஆம் ஆண்டு நிறைவும், பரிசளிப்பும் மலர் வெளியீடும் இன்று மாலை 4 மணிக்கு கல்லூரி திறந்த வெளி அரங்கில் நடைபெறும்.

## பரிசில் நாள்

வரணி மகா வித்தியாலய நாற்பதாண்டு நிறைவு விழாவும், பரிசில் நாளும் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

## நினைவு கூருகின்றோம்...

### 09. 07. 1994

1986-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-கொக்கட்டிச்சோலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

★ **மதன்** (லோ. மதன்-அக்கரைப்பற்று-அம்பாறை)

1988-ம் ஆண்டு கிளி-இராமநாதபுரம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990-ம் ஆண்டு திருமலை-கல்லோயாப் பகுதியில் சிங்களக் காடையர்களினால் படுகொலைசெய்யப்பட்ட புகையிரதப் பகுதி ஊழியரான சண்டிலிப்பாயைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். யாழ் கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தமிழ்ப்பெண். குரும்பசிட்டி கற்பகப் பிள்ளையார் கோயிலடியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1992-ம் ஆண்டு இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.புலவன்** (பொன்னையா மதியழகன் -புதூர், திமிலைதீவு-மட்டு)

**கப்டன் ஜெகதீசன்-டானியல்** (அருளம்பலம் கிருபாகரன்-7-ம் வட்டாரம், மூதூர்-திருமலை)

**லெப்.வதனி** (பவானி சின்னன்-யோகபுரம், மல்லாவி, மாங்குளம்-முல்லைத்தீவு)

**தில்லானா** (கௌரியம்மா கருப்புச்சாமி-பறங்கிசாளம்பன், ஆட்காட்டிவெளி-மன்னார்)

**கப்டன் ஈழவேந்தன்-சுப்ரா** (பாலசுந்தரம் சதீஸ் -மயிலிட்டி, காங்கேசன்துறை-யாழ்)

**கப்டன் இளையவன்-பாலு** (அந்தோனிப்பிள்ளை

அமைக்கும் பணியினை தேச நிர்மாணிகள் மேற்கொண்டுள்ளனர்.

பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டு நிதியின் மூலம் பல பகுதிகளிலும் நடைபெறும் இவ் வேலைகளில் பருத்தித்துறை கேணியடி அல்வாய் கட்டையடிக் குடியேற்றம் ஆகிய இடங்களிலும் இவ் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு கைப்பம்பிகள் பூட்டியும் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தென்னை நாற்று உற்பத்தி

2300 தென்னம் நாற்றுக்களைக் கொண்ட நாற்றுமேடை ஒன்றை தென்மராட்சி புலோப்பளைப் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அமைத்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் தென்னைச் செய்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கின் முன்னோடி நடவடிக்கையாகவே கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இவ் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுகளை பொது மக்களுக்கு நியாய விலைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## நெசவுத் தொழில் ஊக்குவிப்பு

கைத்தெறி நெசவுத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 10 குடும்பங்களுக்கு இத் தொழிலை மேற்கொள்ளவென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக்குழுவினர் பணம் வழங்கியுள்ளனர்.

மட்டுவில் தெற்குப் பகுதியிலுள்ள மக்களுக்கே இவ்வாறு குடும்பம் ஒன்றிற்கு தலா 4750 ரூபா வீதம் இப் பணம் வழங்கபபட்டுள்ளன.



## வீரவேங்கை பபீந்திரன்
## (திருநாவுக்கரசு வவிந்திரன்)

உன் உயிரிலும் மேலாக மதித்து நாட்டு மக்களின்
அடிமை விலங்கை உடைக்க நீ உரிமையுடன்
உன் பாச விலங்கை உடைத்தெறிந்து
அராஜகத்தை அழிக்க என பொங்கி வந்த
உணர்வை செயல்பட வைக்கும் வேளையில்
நாட்டைக் காக்கவேண்டிய குண்டு உம்மை
ஒரு நொடியில் மோசம் செய்தனையே நீ
மறைந்தாலும் நீ விட்டுச் சென்ற உணர்வுகள்
என்றுமே அழிவதில்லை. எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் எம் இதயங்களில் இருந்து நீ என்றுமே
அகலமாட்டாய்.

இவ்வண்ணம்
.- **குடும்பத்தினர்.**

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (இ)

## இரண்டாம் ஆண்டு நினைவு



**கப்டன் ஈழவேந்தன் / சுப்றா**
**(பாலசுந்தரம் சதீஸ்)**
(மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை)

**பிறப்பு:** 07-07-73
**வீரச்சாவு:** 09-07-92

இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மில் ஒழுங்கை,
மல்லாகம். (8747)
- குடும்பத்தினர்.



## லெப். வீமா
## (ரவீந்திராதேவி தங்கராசா)

நேற்றுவரை தென்றலாய் வருடி
எங்கள் உறவுக்கூட்டுக்குள்
உறைந்து போனவளே,
இன்று நினைவுகளையும் இலட்சியங்களையும்
எம்மிடம் தந்துவிட்டு
உப்புக்காற்றோடு கலந்துபோனாய்!
எங்கள் வீமா!......
எங்கள் துப்பாக்கிகள் கனலும்
ஓயாத ரவைகளில்
நாங்கள் விடும் மூச்சுக்காற்றில்
உயிர்த்துடிப்பாய்
நீ வாழ்வாய்.

**— போராளிகள்.**

(சி-9784)

**கப்டன் ஈழவேந்தன்-சுப்ரா** (பாலசுந்தரம் சதீஸ்-மயிலிட்டி, காங்கேசன்துறை-யாழ்)
**கப்டன் இளையவன்-பாலு** (அந்தோனிப்பிள்ளை செல்வகுமாரன்-நவபுரம், கைதடி வடக்கு)
**லெப்.குயிலி-வீமா** (இரவீந்திராதேவி தங்கராசா-நவக்கிரி, புத்தூர்-யாழ்)
**லெப்.தமிழ்மாறன்** (நெல்லிநாதன் விவேகானந்தன்-அராலிவடக்கு, வட்டுக்கோட்டை-யாழ்)
**லெப்.சேந்தன்-நிசார்** (பரஞ்சோதி நிரஞ்சன்-கொக்கட்டித்தோட்டம்-பருத்தித்துறை)
**லெப்.சந்திரபவான்-அலோசியஸ்** (சுந்தரலிங்கம் மோகனதாஸ்-கொத்தியகாடு,-தொண்டமானாறு-யாழ்)
**லெப்.செழியன்-சினா** (இலட்சுமி காந்தன் குமணன் (சீனுகாந்தன்)-நடராசாவீதி வல்வெட்டித்துறை)
**2-ம்லெப்.கேரனா** (வசந்தரூபி தில்லையம்பலம்-3-ம் குறுக்குத்தெரு, அராலிவீதி, பொம்மைவெளி-யாழ்)
**நகைமுகன்** (அருணகிரி சற்குணராசா-5-ம் வட்டாரம்,வேலணை-யாழ்)
**குமாரவேல்-குட்டி** (சிவப்பிரகாசம் பிரம்மசீலன்-நீலியம்பனை ஒழுங்கை மல்லாகம்-யாழ்)
**ஆதவன்** (குகதாஸ் திருமாறன்-புதுவளவுஒழுங்கை-வல்வெட்டித்துறை-யாழ்)
**லெப்.சொக்கன்-சின்னா** (கிறிஸ்ரி ராஜ்மோகன்-ஆலடிச்சந்தி, நல்லூர் வடக்கு-யாழ்)
**அறிவொளி** (தங்கலிங்கம் சிவகுகன்-அளவெட்டி வடக்கு-யாழ்)
**அன்பழகன்/பழனி** (கோபாலர் விஸ்வேஸ்வரன்-கருகம்பனை,கீரிமலை யாழ்)

* மட்டு - பெண்டுகள்சேனையில் 6-7-92 அன்று எமது முகாமைச் சுற்றிவளைத்த சமரின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,
**இளங்கோ** (செல்லத்தம்பி பாலச்சந்திரன் - பொருவில், மன்னம்பிட்டி- பொலநறுவை)

மட்டு - வாழைச்சேனை - சந்திவெளிப் பகுதியில் முஸ்லிம் குழுவொன்றினால் படுகொலை செய்யப்பட்ட 03 தமிழர்கள்.

1993ஆம் ஆண்டு மட்டு - வாகரைப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது பலியான தமிழ்விவசாயி.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

✶ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

(சி-9782) **தமிழீழ விடுதலைப் புலிகள்**

## சுதந்திரக் கட்சியில் இணைவு

ஐக்கிய தேசியக் கட்சியின் ஹேவாவிட்ட பாராளுமன்ற உறுப்பினராக தேசிய பட்டியல் மூலம் பதவி வகித்த திருமதி சிரியானிடானியல் நேற்று சுதந்திரக்கட்சியில் சேர்ந்து கொணடார்.

சுதந்திரக்கட்சி தேசிய அமைப்பாளர் அனுருத்தரத்வததையின் இல்லத்தில் வைத்து சந்திரிகா குமாரணதுங்காவிடம் தனது கட்சி அங்கத்துவ பத்திரத்தை பெற்றுக் கொண்டார்

## கல்விக்கண்காட்சி

(தொல்புரம்)

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி இன்று(9 7.94)காலை 9.00 மணியளவில் அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக் கிழமையும் இக் கண்காட்சி இடம் பெறும். இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சங்கானைகோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு க. தற்பரானந்தன் கலந்து கொளளவுள்ளார். (41)

## 2ம் ஆண்டு நினைவலைகள்



### லெப்.வீமா
### (துங்கராசா ரவீந்திராதேவி)

நவக்கிரி.புத்தூர்.

**பிறப்பு- 29-02:-1973 வீரச்சாவு09-07-1992**

பேரிகை கொட்டி இயக்கச்சி வழியாகப புக
முனைந்த கூலிப்படையைப் புறமுதுகிட்டோட வைத்த
சமரில் காவியம் படைத்த - வீமா
தமிழீழ மலர்வுக்கு நெய்வார்க்க உன்னைப்போல்
பல்லாயிரம் வீரர்கள் அணிவளர்வர் காவியமான
உன் கற்பனையைத் தமிழீழம் மெய்ப்பிக்கும்
உன் கனவு நனவாகும்
(அன்றைய தினம் இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்துப் போராளிகளுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.)

-குடும்பத்தினர்.

நவக்கிரி, புத்தூர். (சி-9778)

# வடக்கு-கிழக்கு ஆசனங்களை கைப்பற்றுவது அரசின் திட்டம்

### அரசின் திடீர் தேர்தல் முடிவு குறித்து சிங்கள வார இதழ்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அங்குள்ள பாதகமான நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்தி விழுங்குவதற்கே அரசாங்கம் திட்டம் தீட்டி திடீர் தேர்தலை நடத்த தீர்மானித்துள்ளது என யுக்திய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

வடக்கு - கிழக்கு தேர்தல் ஆசனங்களை தென் பகுதி தேர்தல் தொகுதியுடன் சமன்படுத்தி மீண்டும் ஆட்சிக்கு வருவதையே அரசாங்கம் இந்த விடயத்தில் அவசரமாக செயல்பட்டது எனவும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய அரசாங்க கட்டுப்பாடற்றபகுதியில் கணிசமான மக்கள வாழ்வதாகவும் எனவே அங்கு தேர்தல் நடத்தக் கூடிய எந்த நிலையும் இல்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பலாலி,ஆனையிறவுஇராணுவ முகாமையும், மண்டைதீவு உட்பட தீவுப் பகுதிகளிலும் ஏனைய மாவட்டங்களின் இராணுவ முகாம்களிலும் தேர்தல் மத்திய நிலையங்கள் அமைத்து அங்கு தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது. இந்த நிலையில் ஐ. தே க. தான் விரும்பிய வாக்குகளை தனக்கு சார்பாக கிடைக்க ஐ. தே. க. திட்டமிட்டுள்ளது.

இதேபோன்ற நிலையை கிழக்கு மாகாணத்தில் செய்து இப் பகுதியின் கூடிய ஆசனங்களை தனதாக்கிக் கொள்ள தேர்தல் ஆணையாளர் மறைமுகமான உதவி செய்கின்றார் என அப்பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை வடக்கு - கிழக்கில் முப்பத்தியொரு தேர்தல் தொகுதியில் ஐ தே க. இருபதையாவது கைப்பற்றுவதே இகன் இலக்கு என தெரிய வருவதாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## கட்டட வடிவமைப்பு பட்டப்படிப்பு பரீட்சை

(கொழும்பு)

மொறட்டுவபல்கலைக்கழக கட்டட வடிவமைப்பு - விஞ்ஞானமாணி பட்டப்படிப்புக்கான தகுதிகாண் பரீட்சைக்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்ள்ளன. 94/95 கல்வியாண்டுக்கான, இந்நுழைவுப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை ஜூலை 21ஆம் திகதிக்கு முன்னர், பரீட்சைகள் மற்றும் கல்விக் கிளைக்கான சிரேஷ்ட உதவிப்பணிப்பாளர், மொறட்டுவ பல்கலைக்கழகம், கட்டுப்பெத்த, மொறட்டுவ எனும் முகவரிக்கு சுய விலாசமிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையினை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

1993ஆகஸ்ட், உயர்தரப் பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட நாலு பாடங்களில் சித்தி அல்லது மூன்று பாடங்களில் சித்தியும் மற்றைய பாடத்தில் 25 வீசுத்திற்கும் குறையாதபுள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்

பூரணப்படுத்திய விண்ணப்பங்களை ஆகஸ்ட் 8 ஆம்திகதி வரை அனுப்பலாம்.

## தேர்தலில் போட்டியிட அரச ஊழியருக்கு வசதி

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிட விரும்பும் அரச ஊழியர்கள் அதற்காக பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கு ஒரு மாத முன்னறிவித்தல் கொடுக்க வேண்டுமென்றவிதி தளர்த்தப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் திடீரென கலைக்கப்பட்டதாலும், அதிலிருந்து ஒருமாத காலத்துள வேட்பாளர் மனுக்கள் சமர்ப்பிக்க வேண்டுமென காலம் குறிக்கப்பட்டதாலும், இம் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

ஓய்வூதியம் பெறுவதற்கு அருகதையுடைய அரசாங்க ஊழியர்கள், ஒருமாத முன் அறிவித்தல் கொடுக்காமலேயே பதவியிலிருந்து ஓய்வு பெற்று, பொதுத் தேர்தலில் போட்டியிடலாம்.

### மட்டு. மாவட்டத்தில்

## கொத்தணி முறையில் வாக்குச் சாவடி அமையும்

## பொ. ஐ. முவுக்கு ஆதரவு

(கொழும்பு)

மலையகத்தின் பிரபல்யமான தொழிற் சங்கங்களில் ஒன்றான தேசிய தொழிலாளர் சங்கம் பொதுமக்கள ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிக்க முன் வந்துள்ளது. செங்கொடிச் சங்கமும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிக்கவுள்ளதாக தெரியவருகின்றது

இத் தொழிற் சங்கங்களின் வேட்பாளர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பட்டியலின் கீழ் போட்டியிடவிருக்கின்றனர்.

## புதிய கட்சி விண்ணப்பம்

(கொழும்பு)

புதிய கட்சி ஒன்றை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒன்றை ஜூன் 28ஆம் திகதி தேர்தல் ஆணையாளரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தேசிய மீட்பு முன்னணி (ஜாதிய கலவா தொனிம பெரமுன) என இக் கட்சி வழங்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

இம் முன்னணிக்கு தலைவராக ஜே. வி. பியின் செயலாளர் சோமவன்ச அமரசிங்கா கடமையாற்றுவார் என இம் முன்னணியின் வட்டாரங்சள் 'இரு' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

இதன் செயலாளராக ஆரிய பொலேகொட கடமையாற்றுவார். தற்போதைய சூழ்நிலையில் நாட்டையும்

## கட்சிதாவிய எம்.பி.க்கு பாதுகாப்பு நிறுத்தம்

(கொழும்பு)

ஐ.தே.க விலிருந்து சுதந்திரக் கட்சிக்கு தாவிய தேசியப் பட்டியல் எம்.பி. காலிங்க ஒபேவன்சவுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளது- தமக்கான பாதுகாப்பு விலக்கப்பட்டதற்கான காரணம் என்ன என இவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வன சிங்கவை கேட்டுள்ளார்.

தமக்கு பாதுகாப்பு வழங்கி வந்த பொறளை பொலிசார் கடந்த 30 ஆம் திகதி முதல் தமது பணியை நிறுத்திவிட்டதாகவும் மேலிட உத்தரவையடுத்து பாதுகாப்பு விலக்கப்படுவதாக பொலிஸ் அதிகாரி தம்மிடம் கூறியதாகவும் ஒபேவன் சபாதுகாப்பு அமைச்சின் செயலர் ஹமில்டனுக்கு அறிவித்துள்ளார். இது குறித்து அவர் பொலிஸ் மா அதிபருக்கும், சுதந்திரக் கட்சித் தலைவிக்கும் அறிவித்துள்ளார்.

## தகவல் தொடர்பு அதிகாரி தேர்தலில் போட்டி

(கொழும்பு)

அரசாங்க தகவல் தொடர்பு அதிகாரியாக கடமையாற்றிய சுனந்த மத்தும பண்டார ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட இருப்பதாக ''யுக்திய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுளளது. இவர் கண்டி மாவட்டத்திலேயே போட்டியிட விருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## சஜீத் போட்டியிட மல்லிமராச்சி முயற்சி

சஜீத் பிரேமதாசாவை ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட வைக்கும் முயற்சியில் கட்சியைச் சேர்ந்த சில முக்கிய உறுப்பினர்கள தீவிர முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

மறைந்த பிரேமதாசாவின் மகனான சஜீத் பிரேமதாசாவுடன் அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சி தொடர்பு கொண்டு தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுள்ளார். மேலும் தந்தை விட்டுச் சென்ற வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு ஐ.தே கவின் கைகளைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்-

ஆயினும் சஜீத் பிரேமதாசா தனது முடிவை மாற்றிக் கொண்டதாக தெரியவில்லை. தந்தையின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஆணைக்குழு ஒன்றை நியமிக்காமல் அரசாங்கம் தட்டிக் கழித்து வருகிறது. எனவே அரசின் இத்தகைய போக்கைக் கண்டித்து நான் ஐ தே. க வின் செயற் குழு உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகுவதுடன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ தே.க. சார்பில் போட்டியிடவில்லை எனவும் சஜீத் பிரேமதாசா ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். கரையோரம் நோக்கி ராணுவம் தாக்குதல்

(குருநகர்)

மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ராணுவம் நேற்று முன்தினம் அதிகாலை 2-50 மணியளவில் யாழ் கரையோரப் பகுதிகளை நோக்கி சரமாரியாக துப்டாக்கிப் பிரயோகம் நடத்தியது.

இதே வேளை கடந்த புதன் கிழமை இரவு 8 மணியில் இருந்து 9 மணிவரை கடற்பிராந்தியத்தை நோக்கி ஒளிக் கதிர் பாய்ச்சி எறிகணை- மற்றும் துப்பாக்கிச் சூடு என்பன நடத்தப்பட்டன.

எறிகணைகள் சிறுத்தீவு-கொட்டடி கடற் பிராந்தியங்களில் வீழ்ந்து வெடித்தன. அதனையடுத்து கரையோரப் பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவர்கள் தொழிலை கைவிட்டு திரும்ப நேர்ந்தது. (21)

## 2- ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை ஆதவன்**
**(குகதாஸ் திருமாறன்)**

**தாயின் மடியில்:-** 20-06-1975

**தாயகமண்ணில்:** 09-07-1992

நெஞ்சினில் பூத்த நேய உறவாய்
நினைவுச் சோலையில் மலர்ந்த மதுர தமிழாய்
துஞ்சிடா மனங்களுள் தோன்றும் ஆதவனே!
கெஞ்சி நின்றோம் கண் முன் வருவாயே!

புதுவளவ,
வல்வெட்டித்துறை.

அப்பா, அம்மா, சித்தப்பா, சித்தி,
சகோதரர்கள்.

(8732)

## வாக்குச் சாவடி அமையும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொத்தணி முறையில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட இருப்பதாகத் தெரியவருகின்றது.

பாதுகாப்பு காரணங்களுக்காக வாக்களிப்பு நிலையங்கள் ஒன்றுபடுத்தப்படுகின்றன மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 255 வாக்களிப்பு நிலையங்களும் கொத்தணி முறையின் கீழ் 163 நிலையங்களாக இணைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மட்டக்களப்பின் கொக்கட்டிச்சோலை, வாகரை பிரதேசங்களுக்கு உலங்கு வானூர்தி மூலமே வாக்குப் பெட்டிகள் எடுத்து வரப்பட இருக்கின்றன

## 2 ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை அறிவொளி/பர்மன்**
**(தங்கலிங்கம் சிவகுகன்)**

**மண்ணில்:** 25-1-1971

**விண்ணில்:** 9-7-1992

தளராத துணிவோடு களமாடினாய்
தமிழீழ நினைவோடு உயிர்நீத்தாய்
அசையாத உறுதி உள்ள உத்தமனே
நினையாத நாளில்லை உன்னை நாம்
நீங்காத நினைவலையாய் நிற்பவனே
பண்பான தோழர்களுடன் பறந்து வா
மலருகின்ற தமிழீழ மதனில் வாழ-

எமது இல்லத்தில் இன்று நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு சகல போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அறிவொளி குடும்பம்**

தற்போதைய முகவரி·
பெரிய மதவடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

நிரந்கர முகவரி:
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(8745)

மக்களையும் தெளிவான ஓர் அரசியலில் வைத்திருக்க வேண்டும் என்றும் எனவே தான் மேற்படி கட்சியை ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## குளம் ஆழமாக்கல்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இராமன் குளம் யாழ். மாநகரசபை ஊழியர்களால் அண்மையில் ஆழமாக்கப்பட்டுள்ளது.

குளங்களை ஆழமாக்கி மழை நீரைத் தேக்கி வைப்பதால் கிணற்று நீர் உவர்த்தன்மை அடையாது என்ற நோக்குடன் யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ள குளங்கள் யாவும் ஆழமாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (24)

## சுயேட்சையாக போட்டி

(கொழும்பு)

சுயேட்சை குழுவாக தேர்தலில் போட்டியிட ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தாவும் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கண்டெடுப்பு

யாழ் மின்சார நிலைய வீதியில் மணிக்கூடு ஒன்று க. விமலேந்திரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## இசைப்பேரவை அங்குரார்ப்பணம்

நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இசைப்பேரவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. இவ்வைபவத்தில் சங்கீத வித்துவான்கள், சங்கீத பூஷணங்கள், இசையாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

## அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்



**பேராசிரியர் அ. துரைராசா**

**தோற்றம்:** 1934-11-10

**மறைவு:** 1994-06-11

எங்கள் குடும்பத்தலைவனின் இப்பூவுலக இறுதி யாத்திரையில் பங்குபற்றியவர்கட்கும், பத்திரிகைகள், பிரசுரங்கள், கடிதங்கள், செய்திகள் மூலமாக அஞ்சலி செலுத்தினோர்க்கும், கொழும்பில் இருந்து இல்லத்திற்கு பூதவுடலைக் கொண்டு வரும் வழியில் அஞ்சலி செலுத்தியவர்கட்கும், நான்கு நாட்கள் (12-6-94 - 15-6-94) துக்கதினம் அனுட்டித்தோர்க்கும், வீதிகள், வீடுகள், பல்வேறு நிறுவனங்கள், நிலையங்கள் தோறும் சோகமய சோடனைகள் செய்தோர்க்கும், பல்லாயிரக் கணக்கில் மக்கள், மாணவர்கள் கலந்து கொண்ட மரணச் சடங்கை சீராக நடாத்த உதவி புரிந்தவர்களுக்கும், கொழும்பில் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியோர்க்கும் சுகவீனமுற்றிருந்த காலத்தில் பல்வேறு உதவி புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

11-7-94-ல் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி, சபண்டீகரண கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ்களை அனுப்ப முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

**மனைவி, மக்கள்.**

கல்வத்தை, வதிரி.

(8741)

# சுத்தம் பேணாதிருந்த இறைச்சிக்கடை மூடப்பட்டது

## முல்லை மாவட்டத்தில் நடவடிக்கை

முல்லை மாவட்டத்தில் இறைச்சிக் கடைகளில் சுத்தம் பேணும் பொருட்டு விடுக்கப்பட்ட ஆலோசனையை மீறிய தண்ணீரூற்றிலுள்ள ஆட்டிறைச்சிக்கடை ஒன்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் அண்மையில் மருத்துவப்பிரிவின் ஆலோசனையுடன் இறைச்சிக் கடைகளில் சுத்தம் பேணும் பொருட்டு சுற்றுநிரூபம் மூலம் சில நிபந்தனைகளை விதித்திருந்தனர்.

இறைச்சி விற்கும் மேசையினை மெழுகு சீலையினால் மூடவேண்டும் எனவும் விற்பனையாளர் மேலங்கி அணிய வேண்டுமெனவும் கடையின் சுற்றுப்புறம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும், நிறுக்கும் தராசு, கொழுக்கி, கத்தி என்பன தூய்மையாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந் நிபந்தனைகளை மீறிய இறைச்சிக்கடை மீதே இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


### பெண்களுக்கான
## வேலைவாய்ப்பு

தமிழீழப்பெண்கள் தொடர்பான சமூக ஆய்வினை மேற்கொண்டு வரும் நிறுவனம் ஒன்றில் பணிபுரிய பெண்கள் தேவை.

வயதெல்லை:- 19 தொடக்கம் 30 வரை

தகைமை:- ஆகக்குறைந்த தகைமையாக க.பொ.த. உயர்தரத்தில் 03 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். புள்ளி விபரம் திரட்டுதலில் தேர்ச்சி பெற்றிருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது விரும்பத்தக்கது,

விபரங்கள் நேரில்:-

**விண்ணப்ப முடிவுத்திகதி:- 12-7-1994**

வி. இல. 338
மே/பா ஈழநாதம் பணிமனை
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9773)



பிந்திய செய்தி!

### ஜோ. எகட்டனின்
## ஜெசித்தாரா
### வழங்கும் முதன்மைச் சேவைகள்

உங்களுக்குத் தேவையான உணவுப் பொட்டலங்களை உங்கள்எண்ணத்துக்கேற்பவும். பணத்திற்கேற்பவும் வடிவமைத்துத் தருவோம். நீங்கள் இதுவென்று குறிப்பிடுங்கள் நாங்கள் முடித்து வைப்போம். அத்துடன் மட்டுமல்லாமல் வெளிநாட்டில் பயிற்சி பெற்ற சமையல் நிபுணர்களின் ஆலோசனைக்கேற்ப மேலைத்தேய, கீழைத்தேய உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள் மற்றும் உங்கள் மங்கள நிகழ்வுகள் கொண்டாட்டங்கள், விழாக்கள் பிரியாவிடை உபசாரங்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு இலவச மண்டப வசதியுடன் உணவு பரிமாறு சேவை மற்றும் பல விபரங்களுக்கு எமது முகாமையாளரைச் சந்தியுங்கள்.

### ஜோ. எகட்டனின்
## ஜெசித்தாரா


# தேர்தல் தேவைக்கு கிரிமினல்களுடன் பேச்சு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் தொடர்பாக பாதாள உலக கிரிமினல்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு ஐ. தே. க. முக்கியஸ்தர் சிலர் சென்ற 12-ம் திகதி கொழும்பு வாழைத்தோட்டத்தில் குணசிங்கபுர விலுள்ள கிரிமினல்கள் மூவருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவின்முக்கியஸ்தர் தலைமையில் இப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுள்ளதாகவும், மட்டக்குளிய, பாலத்துறை, புளூமண்டல், கொம்பனித் தெரு, கொச்சிக்கடை ஆகிய பகுதியைச் சேர்ந்த கிரிமினல்களுடனும் மேற்படி பேச்சு வார்த்தை நடைபெற்றுள்ளது எனவும் தெரியவருகிறது.

தேர்தல் காலங்களில் பாதாள உலககிரிமினல்களின் நடவடிக்கைக்கும் அவர்களின் வியாபாரத்திற்கும் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என உறுதி அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# பேச்சுவார்த்தைகளை நாம் விரைவில் ஆரம்பிப்போம்

## பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுச்செயலாளர்

(கொழும்பு)

நாட்டில் உள்ள முக்கிய பிரச்சினையாக வடக்கு கிழக்கு பிரச்சினையை தாம் கருதுவதாகவும் எனவே அதற்கு ஓர் தெளிவான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் தி மு. ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

'யுக்திய' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் வடக்கு - கிழக்கில் உள்ளது இனப்பிரச்சினை என்றும் அரசாங்கம் தெரிவிப்பதைப் போன்று அது பயங்கரவாத பிரச்சினை அல்ல என தெரிவித்தார்

சுதந்திரக்கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்கள் எல்லோரும் இன்று ஐ. தே. க. வில் இருக்கின்றார்கள். ஏனையோர் இன்று எம்முடன் இணைந்து செயற்படுகின்றார்கள். எனவே நாம் பிரச்சினையை இலகுவாக தீர்க்க முடியும் என நம்புகின்றோம். நாம் பிரச்சினையை துணிந்து தீர்க்க முடியும் எனவும் ஐ. தே. க. தேர்தலின் பின்னர் எதனைச் சொன்னாலும் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என தெரிவித்துள்ளார்.

நாம் விரைவில் பேச்சு வார்த்தைகளை நடத்துவோம். யுத்தத்தை நிறுத்திவிட்டு பேச்சு வார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளோம். அப்போது விடுதலைப் புலிகள் யுத்தம் செய்யமாட்டார்கள். இது தொடர்பாக தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் ஓர் நம்பிக்கையை யும் கட்டியெழுப்புவோம். சில வேளை தேர்தல் இலாபத்திற்காக சிங்கள இனவாதத்தை எமக்கு எதிரான சக்திகள் பயன்படுத்தலாம். இதற்கு மக்கள் அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

## பிரதேச செயலக திறப்பு

வடமராட்சி அம்பன் கிராமத்தில் அப்பகுதி மக்களின் வசதி கருதி நிரந்தர உப பிரதேச செயலகம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

மருதங்கேணி பிரதேசசெயலர் திரு. க. கனகரட்ணம் தலைமையில் இன்று காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படும். பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் இச் செயலகத்தை அங்குள்ள கமநலசேவை நிலைய கட்டிடத்தில் திறந்துவைப்பார்.

முன்னர் வாரத்தில் செவ்வாய்க்கிழமைகளில் சுற்றுலா பிரதேச செயலகமாக இருந்து வந்த இவ்வலுவலகம் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ளன. இதன் பிரதேச செயலாளராகதிரு க.கனகரட்ணம் கடமை புரிவார். (யோ)

# எதிர்க்கட்சி வரிசையில் பொ. ஐ. மு. உறுப்பினர்

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையில் பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்ததுடன் முன்னர் அமைச்சராக பதவி வகித்த மேற்படி கட்சியைச் சேர்ந்த நாவின்ன எதிர்க்கட்சித் தலைவராக கடமையாற்றவுள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும்ஐக்கியதேசியக் கட்சிக்கும் இடையே புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத்தொடர்ந்து பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர வேண்டியிருந்தது.

இதேவேளை ஐ-தே- க-வைச் சேர்ந்த சிலர் மிக விரைவில் மாகாண அமைச்சர்களாக நியமனம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இனப்பிரச்சினை இல்லை ராணுவநடவடிக்கை தேவை

## புதிய முன்னணி அறிவிப்பு

வடக்குக் கிழக்கில் இனவாதப் பிரச்சினை கிடையாது. நாட்டைப் பிரிக்கும் பிரச்சினையே அவர்களுக்கு உள்ளது. அதனை யுத்தத்தின் மூலமே தீர்க்க வேண்டும் என ''சிங்களவர் சுதந்திர முன்னணி'' என்ற புதிய அமைப்பு தெரிவித்துள்ளது.

களனி புகையிரத நிலையத்திற்கு அண்மையில் உள்ள கட்டடம் ஒன்றில் நிறுவப்பட்டுள்ளது. இம் முன்னணி நடைபெறவுள்ள தேர்தலை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்படவில்லை எனவும் தற்போதைய போக்குகள் குறித்து தமது கவனத்தை செலுத்தும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குறுகிய காலத்தில் தீர்க்கப்படவேண்டிய தமது 12 கொள்கைகளை சில அரசியல் கட்சிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது. அவையாவன (1)வடக்கு கிழக்கில் இனவாதப்பிரச்சினை கிடையாது நாட்டைப் பிரிக்கும் பிரச்சினையே உள்ளது. இதனை யுத்தத்தின் மூலமே தீர்க்க வேண்டும்.

(2)இந்திய அரசின் வற்புறுத்தலில் நிறுவப்பட்டுள்ள மாகாண சபை அமைப்புகள் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாணும் வழியாக அமையாது. எனவே அவற்றைக் கலைக்க வேண்டும்.

(3)வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கோ வேறு எந்த இனங்களுக்கோ அப்பகுதிகளை அவர்களின் சொந்த பூமியாகக் கொள்ள அனுமதிக்கக்கூடாது.

(4)ஒன்றாக இணைந்துள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களை கட்டாயம் இரண்டாகப் பிரிக்க வேண்டும்.

(5)நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்பனவும்அதில் அடங்கும்.

## செயற்பாடு பரவலாக்கம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பிரதேச இந்து வாலிபர் சங்கம் தனது செயற்பாடுகளை பரவலாக்கும் நோக்குடன் தமது பிரதேச எல்லைக்குட்பட்ட கிராமங்களில் இணைப்பகங்களை உருவாக்கி வருகின்றது.

இதன் முதற் கட்டமாக அண்மையில் வடலியடைப்பு கிராமத்தில் தனது முதலாவது இணைப்பகத்தை அங்குரார்ப்பணம் செய்தது. மேற்படி சங்க தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடலியடைப்பு கிராம இணைப்பாளராக திரு. அ. தனராஜ் துணை இணைப்பாளர்களாக திரு ச. பார்த்திபன், திரு.க. குமரச்செல்வன் ஆகியோரும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

# தமிழில் நிரப்பிய படிவத்தை கிழித்தார் சிங்கள அதிகாரி

(கொழும்புத்துறை)

வவுனியா மாவட்டத்தில் பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப்பப்படிவத்தைத் தமிழில் பூர்த்தி செய்து இங்குள்ள மேலதிகப் பதிவாளர் பணிமனையில் பதிவாளரிடம் கையளித்த போது அப்படிவம் உடனே கிழித்து வீசப்பட்டது. அங்கிருந்து வந்த ஒருவர் மூலம் இதுதெரியவருகிறது

பிறப்பு விண்ணப்பப்படிவம் தமிழில் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதைக் கண்டே பதிவாளர் உடனே அந்தப் படிவத்தைக் கிழித்தெறிந்தாராம்.

உடப்புஆண்டி முனையைச் சேர்ந்த திரு.ச. சிவமூர்த்தி என்ற குடும்பஸ்தருக்கே இந்த அனுபவம் கடந்த மாத நடுப் பகுதியில் ஏற்பட்டது.

விண்ணப்பப்படிவத்தை கிழித்தெறிந்த பதிவாளர் சிங்களத்தில் பிறப்பு விண்ணப்பப் படிவத்தை நிரப்பித்தருமாறு கூறி வேறொரு படிவத்தையும் இவருக்கு கொடுத்துள்ளார். (24)

# கரும்புலிகள் நினைவாக சுயதொழில் ஊக்குவிப்புகள்

(பருத்தித்துறை)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வடமராட்சிப் பிரிவு கரும்புலிகள் தினத்

சுயதொழில் ஊக்குவிப்புக்கடன்களையும் 120குடும்பங்களுக்கு தலா 10,000 ரூபா வீதம் விசேட விவசாய கடன்களையும் வழங்கியுள்ளது.


## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

[illegible]


(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)

சுண்டுக்குளி

(எமக்கு வேறு கிளைகள் இல்லை)

(சி-9777)

## சீகான் குசைனீஸ் கராட்டியின் மாணவர் தேர்வும் கராட்டி வீரச்செயல்களும் பட்டி வழங்கும் வைபவமும்



யப்பானில் 5-வது கறுப்புபட்டியைப் பெற்ற சீகான் குனசனி அவர்களிடம் இந்தியாவில் பயின்று முதலாவது கறுப்புப் பட்டியைப் பெற்றவரான தாளையடியில் வசிக்கும் **திரு. செல்வராஜ் ( ராயூ )** மாஸ்ரர் அவர்கள் உடுத்துறை, செம்பியன்பற்று, பருத்தித்துறை ஆகிய இடங்களில் பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கு தேர்வும் பட்டி வழங்கும் வைபவமும் எதிர்வரும் 10 - 07 - 94 அன்று ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை செம்பியன்பற்று வடக்கு விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (8739)

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

# பதவி வெற்றிடம்

**2ບ2.9. களஞ்சியப் பொறுப்பாளர்**

சம்பளம்:- 165/88 - 11ன்படி $\frac{905/ - - 1605/-}{40\times5 - \quad 30\times10}$

**கல்வித்தகைமைகள்:-**

அ) கூட்டுறவுச்சங்க ஊழியர் 12-ம் சம்பளத்திட்டத்தில் களஞ்சியப்பொறுப்பாளர் விலைக்கு வாங்கல் உத்தியோகத்தர்/ சில்லறை விற்பனை நிலைய மேற்பார்வையாளர்/சில்லறை விற்பனை நிலைய முகாமையாளர் ஆகிய பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச்சங்க ஊழியர் 13-ம் சம்பளத்திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது,

ஆ) அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் பொருட்கள் வழங்கல்/பொருட்கள் முகாமை/ விற்பனையியல் பற்றிய டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் களஞ்சிய நிருவாகப் பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது,

இ) கூட்டுறவுச்சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் க.பொ.த (உயர்தரம்) சான்றிதழ் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் களஞ்சிய நிருவாக பதவியொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**பொது**

01. வயது:- 23க்கும் 40க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (தற்போது கூட்டுறவுச்சங்க பணியாளராக இருப்பவர்கட்கு இவ்வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)
02. வசிப்பிடம்:- குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
03. பிணைப்பணம்;- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் சட்ட விதிகட்கு அமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையை செலுத்துதல் வேண்டும்.
04. விண்ணப்பத்துடன் உள்ளடக்கப்பட வேண்டியவை - கல்வி, பிறப்பு, அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ்கள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகள இணைகசப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 21-07 94ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'களஞ்சியப்பொறுப்பாளர் பதவி' என குறிப்பிட்டு கீழ்க்காண் விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்**

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி-9780)

[illegible]
தன்று வடமராட்சிப் பகுதியில் உள்ள 15 குடும்பங்களுக்கு தலா 10,000 ரூபா வீதமும் வழங்கியுள்ளது.

இக்கடன் வழங்கும் விழா பொலிகண்டி பாலாவி அரசினர் பாடசாலையில் திரு.க. தங்கவேலாயுதம் தலைமையில் நடைபெறறது. இவ்விழாவிலே உரையாற்றிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வடமராட்சி இணைப்பாளர் திரு. வளவன் தமிழீழ மக்களின் சுபீட்சத்திற்காகவும், விடிவிற்காகவும் கரும்புலிகள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இக்கரும்புலிகளின் இவ்வீரசாதனைகள் உலகத்திலேயே மிக உயர்ந்த சாதனைகள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. கரும்புலிகள் தினமான இன்று இப்பகுதிகளில் உள்ள 27 குடும்பங்களுக்கும் அவர்களது வாழ்க்கையை வளம்படுத்துமுகமாகவும், எமது பொருளாதாரத்தை மேம்படுத்துமுகமாகவும் இக்கடன் வசதகளை வழங்குவது மிகவுமமகிழ்ச்சிக்குரியதாகும். இக்கடன்களைப் பெற்றுக் கொள்வோர கடன்கள் வழங்கப்பட்டதற்கான நோக்கத்தை ஈடுசெய்வதற்கு வழிவகுப்பதுடன் கடனை ஒழுங்காக மீளச் செலுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும் பல்வேறு வகைகளிலும் எமது பகுதிகளின் பொருளாதார வளத்தை அபிவிருத்தி செய்வதில் நாம் ஒவ்வொருவரும் அக்கறையுடன் செயறபட வேண்டும் என்றார்.

இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் திரு. வி தில்லைநாதன்,பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ் மாவட்ட கடன் வழங்கு திட்டமிடல் பொறுப்பாளர் திரு. தவக்குமார், கோட்டப் பொறுப்பாளர் திரு. சத்தியலிங்கம் உட்பட இன்னும் பலர் இங்கு உரையாற்றினர் தெரிவு செய்யப்பட்ட 27 குடும்பங்களுக்கும் கடன் பணம் தலா பத்தாயிரம் ரூபா கையளிக்கப்பட்டன. (25)

## பனைவள கண்காட்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் வன்னி, முல்லை, மன்னார் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து நடாத்திய பனைவளம் சார் உற்பத்திக் கண்காட்சி கடந்த 26-ம்திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

வன்னி மாவட்ட அரசியல் துறையைச் சேர்ந்த திரு. பாப்பா அவர்களால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இக்கண்காட்சி நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணிப்பாளர் மங்கள விளக்கை ஏற்றி வைக்க, பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி பொது முகாமையாளர் தேசியக்கொடியையேற்றிவைத்தார்.

ஆயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டுப் பயன்பெற்ற இக் கண்காட்சியில் பனை தென்னைவளம் சார் அலங்காரப் பொருட்கள், உணவுப் பண்டங்கள், அத்தியாவசியப் பாவனைப் பொருட்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததோடு இவ் உற்பத்திக்கான போட்டிகளும் நடாத்தப்பட்டன.

கண்காட்சியைத் தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கடந்த வருட பனை சார் உற்பத்திப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியகல் விளானைச்சேர்ந்த செல்வி மா. மாலினிதேவி முரசுமோட்டையைச் சேர்ந்த க. ஜெயந்தினி ஆகியோருக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு..

அரசியல்வாதிக்கு ஏற்ற நினைவாற்றல் எதை நினைவில் கொள்வது எதை மறப்பது என்பதை தெரிந்திருக்கும்.

- ஜோன் மார்லி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 09-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05


## தேர்தல் கண்காணிப்பு

கடந்த காலம் எதிலும் இடம் பெறாத அளவிற்கு இம்முறை பொதுத் தேர்தலின் போது வன்முறைகள் இடம்பெறலாம் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். இம் மோதல்கள் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையிலானதாகவும், அரசாங்கத்தின் சட்டவிரோதக் குழுக்கள் மற்றும் பாதாள உலகக் கிரிமினல்கள் ஆகியவற்றிற்கு இடையிலானதாகவும் அமையலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு எதிர்பார்க்கை இருக்கின்ற போதும், தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச அவதானிகள் குழு ஒன்று அழைக்கப்படத் தேவையில்லை என சுதந்திரக்கட்சியின் பிரதித்தலைவியும், மேல் மாகாண முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார். தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா, கட்சிகள் கோரிக்கை விடும் பட்சத்தில் சர்வதேச கண்காணிப்புக்குழுவை அழைப்பது குறித்துப் பரிசீலிக்கத் தயாராக உள்ளதாக விடுத்த அறிவிப்புக்குப் பதிலாகவே சந்திரிகா குமாரணதுங்காவின் பதில் அமைந்துள்ளது.

சர்வதேச கண்காணிப்புக்குழுவின் தேவையை நிராகரித்த சந்திரிகா குமாரணதுங்கா அதற்குக் கொடுத்த விளக்கமானது இக்குழுக்கள் கடந்த காலத்தில் திறம்படச் செயலாற்றவில்லை என்பதே ஆகும். சந்திரிகா குமாரணதுங்காவின் இக்குற்றச்சாட்டு ஆதாரமற்றதொன்றென தட்டிக்கழித்து விடக் கூடியதல்ல.

ஏனெனில், கடந்த காலத்தில் ஐ.தே.கட்சி ஆட்சியின் போது நடத்தப்பட்ட தேர்தல்கள் பலவற்றின் போதும் சர்வதேச கண்காணிப்புக் குழுக்கள் அழைக்கப்பட்டிருந்தன. ஆனால், இத்தேர்தல்களின் போது இடம்பெற்ற வன்முறைகள், மோசடிகள் என்பனவற்றை தடுத்து நிறுத்தவோ அன்றிப் பரிகாரம் காணவோ அவற்றால் முடியவில்லை. இதனை அழைத்த அரசாங்கத்திற்கு விசுவாசமாகச் செயற்பட்டு விட்டுச் சென்றார்களா? அன்றி அவர்களால் இவற்றைக் கண்டறிய முடியாமல் போய்விட்டதா? என்பது குறித்து முடிவு கூறமுடியாத நிலையே உள்ளது.

# "கடலகவியற் கல்வி மேம்பாட்டிற்கு அமரர் பேராசிரியர் அ. துரைராஜாவின் பங்களிப்பு"

மறைந்த யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான அ. துரைராசா அவர்கள் தமது பதவிக்காலத்தில் பல்கலைக்கழகத்தில் மட்டுமல்லாது பல்கலைக்கழகத்திற்கு வெளியேயும் கல்வி மேம்பாட்டிற்கான தமது பணியினை செவ்வனே ஆற்றியிருப்பது நாடறிந்த உண்மையாகும். இந்த வகையில் தமிழீழத்தின் துரித பொருளாதார, சமூக, அபிவிருத்திக்கென இவர் தலைமை தாங்கி வழி நடத்திய குழுக்களில் ஒன்றான கடல்வள அபிவிருத்திக் குழுவின் கடல்வள அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்களில் கடல்வளக்கல்விக்கு முனைப்பான இடத்தை இவர் வழங்கியிருந்தமை இங்கு நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியதாகும்.

கடல்வளத் துறையில் தமிழீழம் வகிக்கின்ற பங்கு யாவரும் அறிந்த ஒன்றே. இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு இத்துறையானது மிகச் சிறந்த பங்களிப்பினை வழங்கக்கூடிய நிலையில் இருந்தும் - பொருளியல் ரீதியில் இத்துறை பின்தங்கியிருப்பதையும், சமூகரீதியில் இத்துறை புறக்கணிக்கப்பட்டிருப்பதையும், இதனைவிடக் கல்வி அமைப்பில் கூட இத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமலிருப்பதையும் நன்கு உணர்ந்துகொண்ட பேராசிரியர் அவர்கள் நலிவுற்றிருக்கும் இத்துறையினை மேம்பாடடையச் செய்ய வேண்டுமாயின் அதனை கல்விக்கூடாகவே செய்ய முடியுமெனக் கருதினார். தமது கருத்துக்களைச் செயல் வடிவம் பெறச்செய்வதற்கு பல முனைப்பான கல்விசார் நடவடிக்கைகளையும் இவர் ஆற்றிச் சென்றுள்ளார். குறிப்பாக பாடசாலை மட்டம் தொடக்கம் பல்கலைக்கழக மட்ட வரையிலும் மீன்பிடியில் கல்வி விருத்திக்காக எடுத்த நடவடிக்கைகள் சிறப்பானநடவடிக்கைகளாகக் கருதப்படக் கூடியன.

### பாடசாலை மட்டத்தில் மீன்பிடியியல் கல்வி

1972, 1981 -ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் காரணமாக பாடசாலைகளில் பொதுக்கலைத் திட்டத்தில் ...டுத்தப்பட்டு இப் பாடநெறி தொடர்பான விடயங்கள் 1992-ல் ஆராயப்பட்டன. முடிவாகப் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இருந்து 25-க்கும் மேறபட்ட ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பல்கலைக்கழக விலங்கியல் துறையில் கலந்துரையாடல்களும், செய்முறைப் பயிற்சிகளும் செயலமர்வுகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் சமூகக்கல்வி, விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்களுக்கும் இத்துறை தொடர்பாக மேலதிகப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.



கடல்வளம் சார்ந்த மீன்பிடியியல் கல்வியானது ஆண்டு 4 - 5 வரையில் ஆரம்ப விஞ்ஞான பாடத்திலும் ஆண்டு 6 - 9 வரை சமூகக் கல்வி, விஞ்ஞான பாடப்பரப்பிலும் பொருத்தமான அலகுகளுடன் இணைத்து கற்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன இத்துடன் ஆண்டு 7-8 வரைவாழ்க்கைத்திறன் கற்கை நெறிக்கான பாடத்திட்டமும் வடிவமைக்கப்பட்டு இதற்கென ஒரு ஆசிரியக் கைநூலும் வெளியிடப்பட்டது. இவையாவும் பொதுக்கல்வித் திட்டத்திற்கு இசைவாகவும் பொதுச் சூழலுக்கு இசைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் 1994-ல் க. பொ. த.சாதாரணத்தரத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மாணவர்களைத் தயார் படுத்தும் சேவைகளும் முடுக்கி விடப்பட்டன. இதற்கு துவியாக ...

மீன்பிடிக் கருவிகள், எந்திரவியல் ஆகிய இரு கற்கை நெறிகளைப் போதிக்கின்ற கடற்றொழில் பயிற்சி நிறுவகமான யாழ்ப்பாணப் பயிற்சி நிறுவகம் அரசியல் காரணங்களினால் 1983 முதல் இயங்க முடியாத நிலையில் காணப்பட்டது. இதனால் 1993-ல் இக்கல்லூரியை வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படும் நிலைமையும் தோன்றியபோது இக்கல்லூரியை மூடவிடாது தடுத்து நிறுத்துவதற்கு அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவும் அரசிற்கும் அரசாங்க அதிபருக்கும் மகஜர்கள் அனுப்பப்படவேண்டுமென்று ஆலோசனை வழங்கியதுடன் தானே முன்னின்று அரசிற்கு சங்கங்கள் ஊடாக மகஜர் ஒன்றை அனுப்பி வைத்தமையும் இங்கு நினைவுகூர வேண்டிய விடயமாகும். இங்கு நடைபெறும் அரசியல் நெருக்கடிகளைப் பயன்படுத்தி சிங்கள அரசு திட்டமிட்ட முறையில் எமது கல்விச் செயல்பாடுகளை செயலிழக்கச் செய்யும் இந்நடவடிக்கைக்கு இடமளிக்கலாகாதுஎன்றநிலைப்பாடுடன் இக் கல்லூரியை இயங்க வைத்து கடலகவியல் கல்வியை எமது சமுதாயம் பெறுவதற்கு வழிவகைகள் காணப்படவேண்டும் எனவும் உறுதியாக நின்றார். எத்தகைய இடர் வரினும் கல்விச் செயற்பாடுகள் தொடரவேண்டுமென்ற அவரது நிலைப்பாடு இம்மண்ணின்மீது அவர் கொண்ட பற்றைக் காட்டி நிற்கின்றது.

### பல்கலைக்கழகக் கல்லூரி-டிப்ளோமா கற்கை நெறி

மீன்பிடியியல் பாடசாலை மட்டத்துடன் நின்றுவிடாது பல்கலைக்கழகம் வரையிலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டுமென்று விரும்பியவர் பேராசிரியர்

துரைராசா அவர்கள். மீன்பிடியியலில் உயர்கல்விவாய்ப்புக் குறைவாக இருக்கின்றமை பாடசாலைகளில் மாணவர்கள் இப் பாடத்தினைத் தெரிவு செய்யத் தடையாக அமைகின்றது. என்பதை ...

ஆதரவையும் வழங்கி அக் கற்கை நெறியைத் தொடங்குவதற்கு ஆவன செய்து தர முயற்சிசெய்வதாகவும் ஆலோசனை வழங்கினார். அவரது ஆலோசனையின் பிரகாரம் யாழ். மாவட்டத்திலுள்ள பல கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும், கல்வி வளர்ச்சிக் கழகங்களும் பல்கலைக்கழக மூதவைக்கு மகஜர்களை அனுப்பி வைத்தன. இவ்விடயம் தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு உயர் கல்வி அமைச்சு வரை பேராசிரியர் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**கடந்த 11 - 6 - 94 அன்று அமரரான யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் ஒருமாத நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

### புறநிலைப்படிப்புக்கள் அலகினூடாக மீன்பிடியியல் கல்வி

யாழ் பல்கலைக்கழகத்தின் புறநிலைப்படிப்புக்கள் அலகினூடாக இத் துறை சார்ந்தவர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகளை வழங்க வேண்டுமென பேராசிரியருடன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கோரிக்கை விடுத்தபோது அதனை மகிழ்வுடன் வரவேற்றதுடன் அக் கற்கை நெறிக்கு வேண்டிய பாடத் திட்டத்தினைத் தயாரிப்பத...

...றுள்ளார். பல்கலைக்கழகக் கல்வி சிலருக்கு மட்டும் தான் என்ற பழைய சித்தாந்தத்தை அடியோடு மாற்றிய பெருமையும் இவருக்கே சாரும்

### கடற்றொழில் பீடம்

பேராசிரியர் அ துரைராசா ஓய்வில் செல்லவிருந்த காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட பல்வேறு பிரியாவிடை விழாக்களிலும் தமது பேச்சுக்களின்போது யாழ் பல்கலைக்கழகத்தில் அமையவிருக்கின்ற கடற்றொழில் பீடம் வன்னி மாவட்டத்தில் அமையவிருப்பதை வெளிப்படுத்தினார். நோர்வே நாட்டு ரொம்சோ (ROMSO) பல்கலைக்கழகத்தின் உதவியுடன் யாழ் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கவிருக்கும் கடற்றொழில்பீடம் இத்துறைசார்ந்த நிபுணர்களை உருவாக்கும் எனவும் இதன் மூலம் எமது தமிழீழத்தின் கடல்வளப் பொருளாதாரம் மேம்பாடு அடைவதுடன் நலிவுற்றிருக்கும் கடற்றொழில் சமூகமும் மேனிலை அடைய வாய்ப்பு உருவாகும் எனவும் கருதினார். இப்பீடம் அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் யாவும் இவர் காலத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கடற்றொழில் பீடமானது அவர் எண்ணியது போல வன்னி மாவட்டத்தில் அமைவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் எடுக்கப்படுவது அவர் கனவை நனவாக்கும் என நம்புகின்றோம்.

மலரும் தமிழீழம் பொருளாதாரத்தில் செழிப்புறுவதற்கு கடல் வளம் மிகப் பெருவள...


**ஏ. எஸ். சூசை ஆனந்தன்**
விரிவுரையாளர் புவியியற்துறை


...ற்கு புவியியற் தலைவரும் பேராசிரியருமான செ.பாலச்சந்திரனையும், தாவரவியல் துறைத் தலைவர் கலாநிதி கே. சித்திரவடிவேலையும் உள்ளடக்கிய குழு ஒன்றை நியமித்ததுடன் பயிற்சியை ஆரம்பிப்பதற்கான அனுமதியையும் வழங்கினார். இதன் பிரகாரம் 75 மாணவர்களுக்கு மீன்பிடியியல் கற்கை நெறி 48 மணித்தியாலங்களைக் கொண்டதாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. அடுத்த நெறிக்கான ...

...மாக அமையும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையை இறுதிவரையில் கொண்டிருந்தார். இதற்கு தமிழீழத்தில் மீன்பிடியியல் கல்வியை சகல மட்டங்களிலும் விருத்தியுறச் செய்ய வேண்டுமென்று விரும்பிய பேராசிரியர் அவர்கள் அதற்கான அடித்தளத்தை உறுதியாக இட்டுச் சென்றுள்ளார். இக் கல்வியை விருத்தியுறச் செய்து இதன் மூலம் கடல் வளத்தினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவும் ...

டதா? என்பது குறித்து முடிவு கூறமுடியாத நிலையே உள்ளது.

ஏனெனில், இரண்டிற்குமே பொருந்தும் சந்தர்ப்பங்கள் உண்டு. எதிர்க்கட்சியினர் தேர்தல் முறைப்பாடுகள் பலவற்றை அப்பொழுது கண்காணிப்புக் குழுவிடம் ஆதாரபூர்வமாகக் கொடுத்திருந்த போதும் அதனை அவர்கள் பெரிது படுத்தியதாகவோ அதற்கு நீதி வழங்கியதாகவோ தெரியவில்லை. இதற்கு அவர்களுக்கிருந்த அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு இருந்திருக்கலாம் அல்லது அரசாங்கம் சார்பாக அவர்கள் முடிவு செய்திருக்கலாம்.

இதேசமயம், நூற்றுக்கணக்கான தொகுதிகளில் நடைபெறும்தேர்தலுக்கு மிகக் குறுகியகாலத்திற்கு மிகச் சிறியஎண்ணிக்கையில்சர்வதேசகண்காணிப்புக்குழுவினரை அழைத்து நேர்மையான தேர்தலை நடத்துவதென்பது ஒரு வகையில் ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்றே கொள்ள வேண்டும். ஏனெனில், சில தினங்களுக்கு முன் இங்கு வரும் கண்காணிப்புக் குழுவினர் இங்குள்ள தேர்தல் நிலைவரங்களை விளங்கிக் கொள்ளும் முன்னரே தேர்தலுக்கான திகதிவந்துவிடும். அத்தோடு பரந்த பிரதேசத்தை இச்சிறிய குழுவினரால் நேரடிக் கண்காணிப்புக்கு உள்ளாக்கவும் முடியாது.

ஆனால், காரணம் எதுவாக இருப்பினும் கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாடு திருப்திகரமாக இல்லை என்ற நிலையில், அக்குழுவினரை வரவழைப்பதில் அர்த்தமில்லை என்ற சந்திரிகாவின் முடிவு ஒப்புக் கொள்ளக் கூடியதென்பதே ஆகும். இதேசமயம் சந்திரிகா குமாரணதுங்க, இம்முடிவிற்கு வருவதற்கு தென் மாகாணசபை தேர்தலின் போது தாம் கடைப்பிடித்த வழிமுறைகள் அவருக்கு நம்பிக்கை ஊட்டியதும் காரணமாக இருக்கலாம். அதாவது மக்களைக்கொண்டு தேர்தல் மோசடிகளை முறியடிக்கலாம் என்பது அவரது நோக்கமாக இருக்கக் கூடும்.

சந்திரிகாவின் இம்முடிவானது, மக்கள் மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கையை காட்டுவதாகவும், அவருக்கு இது ஒரு சாதகமான சூழ்நிலையையும் ஏற்படுத்தவும் கூடும். ஆனால் இது ஐ.தே.கட்சி அரச இயந்திரத்தையும், அரச படைகளையும், சட்டவிரோத ஆயுதம் தாங்கிய குழுக்களையும் எத்தளவிற்குத் தேர்தலில் பயன்படுத்தப் போகின்றது. தேர்தல் தோல்வியை எந்தளவிற்கு அனுமதிக்கப் போகின்றது என்பதையே பொறுத்தது. ஐ.தே.கட்சி தேர்தல் தோல்வியை ஏற்கத் தயாராக இல்லாத பட்சத்தில் சந்திரிகாவின் திட்டமானது அரசியல் அவதானிகள் கணிப்பிட்டுள்ள தேர்தல் வன்முறையை விட மேலும் அதிகவன்முறைக்கு வழிவகுப்பதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கல்விச் சீர்திருத்தங்கள் காரணமாக பாடசாலைகளில் பொதுக்கலைத் திட்டத்தில் தொழில் முன்னிலைப் பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. 15 வகையான தொழில் முன்னிலைப் பாடநெறிகளில் கடலக மீன்பிடி (**Marine Fisheries**)(76), உள்நாட்டுமீன்பிடி (**Inland Fisheries**)(77) ஆகிய இருபாட நெறிகளும் உள்ளடங்குகின்றன. ஆயினும் இப் பாடங்கள் இது வரையில் எந்த ஒரு பாடசாலைகளிலும் போதிக்கப்படவில்லை. காரணம் இப்பாடங்களைப் போதிக்கவென உரிய ஆசிரிய ஆளணியினர் அரசினால் உருவாக்கிக் கொடுக்கப்படாமையும், க. பொ. த. சாதாரண வகுப்பு தவிர உயர்தர வகுப்புக்களிலோ, பல்கலைக்கழக மட்டங்களிலோ இப்பாடநெறியைத் தொடர்ந்து மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படாமையும், மனப்பாங்கு சார்ந்த காரணிகளும் மாணவர்கள் இப் பாடத்தினைக் கற்பதற்குத் தூண்டுவனவாகக்காணப்படவில்லை. இந் நிலையை மாற்றி தமிழீழத்தின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள பொருத்தமான பாடசாலைகளில் இப் பாடநெறிகள் போதிக்கப்பட வேண்டுமெனவும் இதனூடாகவே நலிவுற்றிருக்கும் கடல்வளத் துறையினை மேம்படுத்தலாமென்றும் எடுத்துக் கூறிய பேராசிரியர் அவர்கள் பாடசாலைகளில் இப்பாடங்களைப் போதிக்கவென ஆசிரியர் ஆளணியினர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்குக் குறுங்கால பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமெனவும் ஆலோசனை கூறியதுடன் இதற்கென ஒரு குழுவையும் ஏற்படுத்தினர். கலாநிதி கே. சித்திரவடிவேல் (விலங்கியல் துறை) அவர்களின் தலைமையில் புவியியற்துறை, தொண்டமானாறு வெளிக்கள நிலையம் கல்வித்திணைக்களம், பொருண்மிய மேம்பாட்டுக்கழகம், மற்றும் கடல்வளத் துறை சார்ந்த நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று ஏற்ப

களைத் தயார் படுத்தும் சேவைகளும் முடுக்கி விடப்பட்டன. இதற்கு தவியாக இத்துறை சார் விரிவுரையாளர்கள் மற்றும் நிபுணர்களினால் எழுதப்பட்ட (27) இருபத்தேழு கட்டுரைகளை உளளடக்கிய ''கடலக மீன்பிடியியல் - ஓர் அறிமுகம் என்னும் நூலும் கலாநிதி கே. சித்திரவடிவேல் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் சமூகக் கல்வி, விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்களின் உதவியுடன் ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள் பல நடாத்தப்பட்டன.

இத்தகைய ஒரு சிறப்பான நடவடிக்கைகளுக்குவிஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் காகிதாதிகள் போன்றவற்றினைத் தந்துதவியதுடன் முழு மேற்பார்வையாளராகவும் இருந்து செயலாற்றிய பெருமை பேராசிரியர் துரைராசாவுக்கே சாரும், ஆயினும் இப்பாட நெறி போதனையானது இன்று பாடசாலைகளில் மிக மந்த நிலையில் இருப்பது வேதனை தரும் விடயமாகும். கல்வித்திணைக்களம் இவ்விடயத்தில் விரைந்து ஆவன செய்யுமென நம்புகின்றோம்.

## கடற்றொழில் பயிற்சிக் கல்லூரி:

பாடசாலை மட்டத்திலான கல்வியை முடித்துக்கொண்டு வெளியேறுவோர்கள் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகளில் தொழில் சார்ந்த கல்வியையும், பயிற்சிகளையும் பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள போதிலும், மீன்பிடியியல் சார்ந்த தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சிகளானது றொழில் நுட்பக்கல்லூரிகளில் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை ஆயினும் கடற்றொழில் பயிற்சி நிறுவகம் ஒன்றும் நான்கு கடற்றொழில் பயிற்சி நிலையங்களும் தேசிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் இப் பாடத்தினைத் தெரிவு செய்யத் தடையாக அமைகின்றது. என்பதனைச் சுட்டிக் காட்டிய போதும் பல்கலைக்கழகக் கல்லூரியில் டிப்ளோமா கற்கை நெறிக்கு இப் பாட நெறியும் உள்ளடக்கப்பட வேண்டுமென்றும் கோரிய போது வவுனியா இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியில் கடலகவியல் டிப்ளோமா கற்கை நெறியைத் தொடருவதற்கு அனுமதிகோரி பல்கலைக்கழக மூதவைக்கும் உயர்கல்வி அமைச்சு, இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி இயக்குநர் ஆகியோருக்கும் மகஜர் ஒன்றை அனுப்பும்படியும், அதற்குத் தம்மாலான முழு

கரமாக மேற்கொள்ளப்பட்டது. அடுத்த நெறிக்கான பயிற்சிக்கும் ஆயத்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும் இக் கற்கை நெறியை வன்னி மாவட்டத்தில் நடத்துவதற்கும் ஒழுங்கினைச் செய்யுமாறும் அவர் பணித்துச் சென்

வளத்தினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவும் இதன் மூலம் கடற்றொழிலாளர் சமூகமும் மேம்புறச் செய்யும் வண்ணம் அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்வது தான் நாம் அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கமுடியும்.

"ஆயுதம் செய்வோம்,
நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்
கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம்
தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்
பல வண்மைகள் செய்வோம்"

-பாரதி

# உதைபந்தாட்டத்திற்கு மரடோனா 'முற்றுப்புள்ளி'

## அணி பயிற்சியாளரும் இராஜினாமா

[வாஷிங்டன்]

உதைபந்தாட்டத் துறையில் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் உள்ளான ஆர்ஜன்டீனா உதைபந்தாட்ட வீரர் டியகோ மரடோனா தனது உதைபந்தாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டதாக அறிவித்துள்ளார்.

போதைவஸ்துக்களை உட்கொண்டதன் காரணமாக உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியிலிருந்து விலக்கப்பட்ட மரடோனா, பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் எனது உதைபந்தாட்ட வாழ்க்கை முற்றுப் பெற்று விட்டது. இப்போது நான் ஒரு முன்னாள் உதைபந்தாட்ட வீரர் என்றார்.

எனது நான்காவது உலகக் கிண்ண பந்தயத்தில் பங்கு கொள்ள முன்வந்த நான் பலத்த பிரயத்தனத்துடன் விளையாடினேன். ஆனால் அது பயனற்ற கதையாகி விட்டது இனி எனது வாழ்நாளில் பெரும் பகுதியை குடும்பத்தாருடன் கழிப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உலகக் கிண்ண தகுதி காண் வட்டச் சுற்றுப்போட்டியில் ஆர்ஜன்டீனா கடினமான சூழ்நிலையை எதிர்நோக்கிய போது மரடோனா மீள அழைக்கப்பட்டு தனது அணி இறுதிச் சுற்றில் பங்குபற்றும் வாய்ப்பை கடந்த வருடம் ஏற்படுத்தி கொடுத்திருந்தார்.

இதே வேளை ஆர்ஜன்டீனா அணி பயிற்சியாளர் அந்நாட்டு பத்திரிகைகளின் பலத்த கண்டனங்களையடுத்து தம் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

# இந்தியாவுக்கு மிக்விமானம் வழங்க ரஷ்யா இணக்கம்

இந்திய விமானப்படையின் மிக் - 29 யுத்த விமானங்களுக்கு பழுது பார்க்கும் மற்றும் சேவைகள் புரிவதற்கு ரஷ்யா இணங்கியுள்ளது அண்மையில் இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் ரஷ்யாவிற்கு விஜயம் மேற்கொண்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஒப்பந்தத்தில் இதற்கு வழி ஏற்பட்டுள்ளது.

மிக் - 29 போர் விமானங்களை உற்பத்தி செய்யும் மாஸ்கோ போர்விமான நிறுவனத்திற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மிக் - 29 போர் விமானங்களை இந்தியாவுக்கு விற்கும் சாத்தியம் பற்றியும் இந்தியாவுடன் ரஷ்யா பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## வேட்பாளர் பட்டியலில் இடம்கேட்டு உண்ணாவிரதம்

(கொழும்பு)

டாலி வீதி, சுதந்திரக் கட்சிக் காரியாலயத்திற்கு முன்னால் ஒருவர் பாய்விரித்துப் படுத்தவண்ணம் உண்ணாவிரதம் மேற்கொண்டுவருகிறார். இவரைச் சுற்றி மக்கள் கூடிநின்று வேடிக்கை பார்த்த வண்ணமுள்ளனர்.

மொறட்டுவவைச் சேர்ந்த இவர் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இடம் கேட்டு உண்ணாவிரதம் மேற்கொள்வதாக கூறப்படுகிறது.

## செல்லச்சாமி நீக்கப்பட்டமை முற்றுப் பெறாத விடயம்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் பதவியிலிருந்து செல்லச்சமி அகற்றப்பட்ட விடயம் முற்றுப் பெறாத விடயம் என தேர்தல் ஆணையாளர் இ. தொ. கா. தலைவர் தொண்டமானுக்கு அறிவித்துள்ளார்.

எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அம்சங்களில் பூரண உடன்பாடு ஏற்படாததால் செயலாளர் பதவியிலிருந்து செல்லச்சாமி நீக்கம் செய்யப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவிப்பதாக தேர்தல் ஆணையாளர் அக் கடிதத்தில்குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தொண்டமான் கருத்துக் கூறுகையில், முற்றுப் பெறாத விடயத்தை முற்றுப்பெறச் செய்வோம் எனத் தெரிவித்துள்ளார்

## பாராட்டு விழா

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்தி கெட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்து கேவஸ்தான தலைவராக இருந்த திரு சி. சி. முத்துராசாவை பாராட்டி இன்று பிற்பகல் 4. மணிக்கு தொல்புரம் அ. மி. த. க. பாடசாலையில் விழாவொன்று நடைபெறவுள்ளது (24)

## பண்டிதமணி பிறந்ததின விழா

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் தொண்ணூற்றைந்தாவது பிறந்ததின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8. 30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் பண்டிதைபொன்பாக்கியம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

## மாகாணசபை ஆளுநராக ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்

முன்னாள் சபாநாயகரும், ராஜாங்க அமைச்சருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநராக நேற்று ஜனாதிபதி மாளிகையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வடமேல் மாகாண ஆளுநரான கருணாசேன கொடித்துவக்கு பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து இவர் நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வலைப்பந்தாட்டம்

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று இராமநாதன் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 17 ஏ பிரிவில் யா- உடுவில் மகளிர் கல்லூரியை எதிர்த்து யா- கன்னியர்மடம் ம. வி. மோதவுள்ளது.

19 ஏ பிரிவில் யா- உடுவில் மகளிர் கல்லூரியை எதிர்த்து யா- இராமநாதன் மகளிர் கல்லூரி மோதவுள்ளது.

## மீனவர்

வைத்து விடுவிக்கப்பட்டவராவார். இவர் கடந்த 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டு ஐந்து தினங்கள் தடுத்து வைக்கப்பட்டார். தடுத்து வைக்கப்பட்ட குறித்த தினங்களில் கண் கட்டப்பட்ட நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தார்.

இவருடன் இன்பருட்டியில் வைத்து கைது செய்யப்பட்ட இராமலிங்கம் சாந்தகுமார் என்ற மீனவ இளைஞன் மேல் விசாரணைக்காக பலாலிக்கு மாற்றப்பட்டுள்ளார் என தெரிய வருகிறது.

# தமிழ்பெண்களின்சமூக அந்தஸ்தை உயர்த்தியுள்ளதமிழீழப்போராட்டம்

## பெண்களின் சமஅந்தஸ்தை விடுதலைப் புலிகள் உறுதி செய்கின்றனர் என்கிறது பி. பி. ஸி.

வடக்கில் கடந்த பத்து வருடங்களாக நடந்துவரும்போர் அங்குள்ள பெண்களின் நிலையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய பி. பி. ஸி. கொழும்பு செய்தியாளர் இது குறித்து விபரிக்கையில் முன்பெல்லாம் யாழ்ப்பாணப் பெண்கள் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு இருந்தனர். முன்பெல்லாம் அவர்கள் வெளிப்படையாகப் பேசவோ சுதந்திரமாக நடக்கவோ ஊக்கப்படுத்தப்படுவதில்லை. ஆனால் போர் பெண்களை புதிய பங்கும் பணியும் ஆற்றவேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளது.

புலிப்படை இயக்கத்திற்குள் பெண்கள், ஆண்களுடன் சம அந்தஸ்துடன் சமமாகப் போரிடுகின்றனர். சமுதாயத்தை எடுத்துகொண்டால் ஆண்கள் இல்லாதகுடும்பங்களில் பெண்கள் புதிய பொறுப்புகளையும் சுமக்க வேண்டியுள்ளது-

தமிழீழ விடுதலைப் புலிப்படை பெண் போராளிகள் கருத்தைக்கவரும் பிறவிகள், அவர்கள் போருடை அணிந்து துப்பாக்கியுடன் காணப்படுகின்றனர்- நகைகள் எதுவும் அவர்கள் அணிவதில்லை-

பழைய சந்ததியினர் அவர்களைச் சந்தேகக்கண்ணோடு நோக்கலாம்- ஆனால் இளம் பெண்கள், இயக்கத்துக்கு வெளியேயுள்ள பெண்கள்கூட உதாரணமாக கல்லூரி மாணவிகள் போன்ற இளம் பெண்கள் தாங்கள் பின்பற்றவேண்டிய சிறந்த முன் உதாரணங்களாக இவர்களைப் பார்க்கின்றனர்- பெண்களின் இலட்சியங்களில் ஏற்பட்டுள்ள மாற்றம் துரிதமாக மாறிவரும் சமூகத்தை எதிரொலிப்பதாகவுள்ளது.

இதுகுறித்து யாழ்ப்பாணத்தில் சந்தித்த ஒருவர் சமூகம் தற்போது வேகமாக மாறிவருகிறது பெண்கள் போரிடுவதற்கு போர்முனைக்கு வருவதை நான் உதாரணமாகக் கூறமுடியும். இது முற்றாக எதிர்பார்க்கப்படாதது. ஆனால் பெண்களிடையே ஏற்பட்டுள்ள சுதந்திரப் போக்கை இது எடுத்துக்காட்டுகிறது என்றார்.

இந்த சுதந்திரப் போக்கிற்கு சட்டமும் உந்தலாக இருக்கிறது. பெண்களுக்கு சம அந்தஸ்து வழங்குவது புலிப்படையின் சமூகக் கொள்கைகளில் மிக முக்கியமானது. இப்போது சீதன முறையை எதிர்த்து புலிகள் பிரசாரம் செய்துவருகின்றனர்.

புலிப்படையினர் திருத்தி அமைத்துள்ள சட்ட விதிமுறைகளில் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்கிறார் வழக்கறிஞரான சண்முகம் தியாகராசா எமது சமுகத்தில் முன்னர் பெண்கள் சமமாக நடத்தப்படவில்லை இப்போது புதிய தேச வழமைச் சட்டத்தின் கீழ் பெண்கள் சுதந்திரமானவர்கள் ஆண்களுடன் சம அந்தஸ்துடையவர்கள். தமது சொத்துக்களை விற்கவோ, அடைமானம் வைக்கவோ, நன்கொடையாக வழங்கவோ. கணவனின் அனுமதியைப் பெறவேண்டியதில்லை பெண்களைப் பொறுத்தவரை இது ஓர் புதிய சாதனை என்றார் வழக்கறிஞர்.

பெண்கள், ஆண்கள் என்ற விகிதத்தைப் பார்த்தால் சிகிச்சை பெற வருபவர்களில் மிகவும் கூடுதலாக இருப்பவர்கள் பெண்கள். இங்கு நடப்பவற்றால் கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர் பெண்கள். அவர்கள் கூடுதலான பொறுப்புக்களை ஏற்கவேண்டியிருப்பது இதற்கு ஒரு காரணம். இங்கு ஆண்கள் இல்லை அவர்கள் கொல்லப்பட்டு விட்டனர் அல்லது வெளிநாடுகளுக்கு சென்று விட்டனர் அல்லது இன்னும் பல காரணங்களுக்காக ஆணின் வேலையை, பொறுப்பை, பங்கை பெண் ஏற்கவேண்டியுள்ளது. இது இப்போதைய சூழ்நிலையில் அவர்கள் கொடுக்கும் விலை. அவர்கள் சமூகத்தைக் காப்பாற்றி விட்டனர். ஆனால் அதற்கும் ஒரு விலை உண்டு என நான் நினைக்கிறேன் என்றார் மனோதத்துவ டாக்டரான சோமசுந்தரம்.

## எட்டு மாவட்டங்களில்

களை மாவட்டச் செயலாளர் சந்திரசேனாவிடம் கையளித்தார். இம்மாவட்டத்திற்கு 19 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரசும் இம் மாவட்டத்தில் தமது நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தது. இதன் நியமனப் பத்திரங்களை பிரதம செயலாளர் மனோகரன் கையளித்தார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை கையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது அன்றைய தினமே நியமனப் பத்திரங்களைக் கையளிப்பதற்கான இறுதித் தினமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிடும் கொழும்பு மாவட்ட குழு திங்கள் காலை தாக்கல் செய்யும் என கட்சி

## மட்டக்களப்பு நகரில் படையினர் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பொதுத் தேர்தலை முன்னிட்டு படையினர் பல கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நகரில் வழமையான சோதனைச் சாவடிகளுக்குப் புறம்பாக கேந்திர நிலையங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர் மாவட்ட செயலகத்துக்கு செல்லும் வீதியில் மேலதிக வீதித்தடைகள் போடப்பட்டு பலத்த சோதனைகளும் இடம்பெறுகின்றன.

## கொழும்பில்

மகன் சஜீத் பிரேமதாசாவின் பெயர் இடம்பெறவில்லை. ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவிற்கும் சஜீத் பிரேமதாசாவுக்குமிடையேஉடன்பாடு ஏற்படாமையே இகற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது

ஹேமா பிரேமதாசா தனது குடும்பத்தினரின் கட்டுப்பாட்டை மீறி செயற்படுவதாக குடும்பத்தினர் அவர்மீது கடுமையான எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் கூறப்படுகின்றது.

## நான்கு

ணத்துவம பெற்றவர்கள் எனவும், நான்காவது நபர் தலைவர் பிரபாகரனின் வகுப்புச்சகா ஒருவரின் தந்தை எனவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

இந் நான்காவது நபர் விடுதலைப்புலிகள் பற்றி பத்திரிகைகளில்வெளியாகும் தகவல்கள் மற்றும் குறிப்புக்களை நறுக்கி வவுனியாவிலுள்ள தமது நண்பர் ஒருவர் மூலம் வாராந்தம யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவரும் பணியைச் செய்து வந்தவர் எனவும் மேலும் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கந்தையா

நீர்கொழும்பை பிறப்பிடமாகவும், புங்குடுதீவு மடத்துவெளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கந்தையா 28-06-94 அன்று நீர்கொழும்பில் காலமானார் இவர் கந்தையா இராசலெட்சுமியின் அன்புக் கணவரும், நாகநாதி செல்லம்மாவின் அன்பு மருமகனும், சீதா, கோணேஸ் (ஈழநாதம்), வபா, சத்தியா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் நீர்கொழும்பில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேணியடி,
125, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

தகவல்:
நா. கோணேஸ்
(ஈழநாதம்.)
(சி-9787)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தாய் மடியில்:

21 - 7 - 1974

தமிழ் மண்ணில்:

## வெற்றிக்கிண்ணம்யாருக்கு

'94 உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறப் போகும் அணிகளை வரிசைக் கிரமமாகத் தெரிவு செய்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். விண்ணப்பங்கள் பிரசுரமாகியுள்ள விண்ணப்பப்படிவத்தில் அனுப்பப்பட வேண்டும். பரிசு பெறுவோர் குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்படுவர்.

முதலாம் பரிசு 500 ரூபா



தமிழ் மண்ணில்:

9 - 7 - 1992

## லெப். சொக்கன் / சின்னா

### (கிறிஸ்ரி ராஜ்மோகன்)

எண்ணியே ஈராண்டும் போனதெங்கே
எண்ணியே உனை நினைத்து கலங்குகின்றோம்
திண்ணிய நெஞ்சுடனே களமாடி
விண்ணிலே ஒளியானாய் சொக்கா நீயே.

இன்று (9-7-94) நடைபெறும் நினைவுதினத்தை யொட்டி இவருடன் வீரச்சாவை எய்திய அனைத்துப் போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

ஆலடிச் சந்தி.
நல்லூர் வடக்கு, நல்லூர்,
யாழ்ப்பாணம். (8751)

இங்ஙனம்
-- குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

தமிழீழ மண்ணில்:
12-11-1971



தமிழீழ மக்களிற்காக
09 07-1992

## கப்டன் இளையவன் (பாலு)

### (அந்தோனிப்பிள்ளை ஜேக்கப் செல்வகுமாரன்)

(நவபுரம் - கைதடி)

9-7-92 அன்று இயக்கச்சி கட்டைக் காட்டில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடிச்சமரில் வீரச்சாவடைந்தார். இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

நவபுரம்,
கைதடி வடக்கு,

-குடும்பத்தினர்
(8754)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மேல் விசாரணைக்காக பலாலிக்கு மாற்றப்பட்டுள்ளார் என தெரிய வருகிறது.

(யோ)

### கொழும்பு

டாரங்கள் கூறியு 'ளன.

இத்தாக்குதல் பிரிவுகளைத் தேடி பெரும்வேட்டை நடத்தப்படுவதாக பொலிஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

### வெளிநாட்டு

வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகஜெயராஜ் பெர்னான்டோ பிள்ளை மேலும் தெரிவித்துள்ளார்-

### வடக்கில்

தையும் இந்த மனுசு ட் டிக் காட்டியுளளது

அத்துடன் யாழ்ப்பாணத்திற்கான வேட்பாளர் பட்டியல் 1986 இன் பின் சீர்செய்யப்படவில்லை என்பதையும் தமிழர் விடுதலைக் கூட்டணி இதில் சுட்டிக்காட்டியுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-07.09
### சனி இரவு

08, 01 - அறிவியற்கலசம்
08. 10 - நிகழ்வும்பகிர்வும்
08. 25 - நேயர்கடிதங்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம்- வேளையிது உறக்கத்தை விட்டு எழு

### 1994.07.10
### ஞாயிறு காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 -செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

களித் தாக்கல் செய்தது. இதன் நியமனப் பத்திரங்களை பிரதம செயலாளர் மனோகரன் கையளித்தார்.

### களுத்துறை மாவட்டம்

களுத்துறை மாவட்டத்திற்கான நியமனப் பத்திரங்கள் களுத்துறை மாவட்டச் செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் ஜனநாயகக் குழுவின் தலைவர் அமைச்சர் ராஜசமரநாயக்க நியமனப்பத்திரங்களைக் கையளித்தார்.

களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடும் வெகுஜன சுதந்திர முன்னணியின் தலைவர் தமது நியமனப் பத்திரங்களை கையளித்தார்.

### இரத்தினபுரி மாவட்டம்

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் குழுவின் தலைவர் நந்தாமத்தியூ நியமனப் பத்திரங்களை மாவட்ட செயலகத்தில் கையளித்தார்.

### பொலநறுவை மாவட்டம்

பொலநறுவை மாவட்டத்தில் ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிடும் குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் நெல்சன் நியமனப் பத்திரங்களைக் கையளித்தார்.

### அநுராதபுர மாவட்டம்

ஐ தே. கட்சி அநுராதபுர மாவட்டத்திற்கான நியமனப் பத்திரங்களையும் நேற்று கையளித்தது. அமைச்சர் சந்திரா பண்டார அநுராதபுர மாவட்ட செயலகத்தில் பிரிவு அத்தாட்சி அலுவலகரிடம் நியமனப் பத்திரங்களைக் கையளித்தார்.

### மாத்தளை மாவட்டம்

மாத்தளை மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் நியமனப் பத்திரங்களை மாத்தளை மாவட்ட செயலகத்தில் கையளித்தன.

### கொழும்பில் திங்களன்று தாக்கல்

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் தமது நியமனப் பத்திரங்களை

ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிடும் கொழும்பு மாவட்ட குழு திங்கள் காலை தாக்கல் செய்யும் என கட்சியின் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார் இலங்கை தொழிலாளர் காங்கிரசும்,சிறிலங்கா மக்கள் கட்சியும் ஐ. தே. கட்சியுடன் இணைந்து போட்டியிட இருப்பதாகவும் விஜேசேகர தெரிவித்தார், பொதுஜன ஐக்கிய முன்னணியும் திங்கட்கிழமை தமது நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யவுள்ளன. இவற்றின் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் வேலை தற்போது பூர்த்தியடைந்து வருவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் குழுவினர், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி என்பன பொதுஜன ஐக்கிய முன்னணியின் குழுவாக சேர்ந்துள்ளன.

இலங்கை கம்யூனிஸ்ட்சட்சி, சிறிலங்கா மக்கள் கட்சி, தேசவிமுக்தி ஜனதாக் கட்சி என்பன அந்த முன்னணியின் ஏனைய அங்கத்துவ கட்சிகளாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் திகாமடுல்ல, யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் மட்டும் தனித்துப் போட்டியிடுவதாக கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை இரத்தினபுரி மாவட்டத்தில்தான் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளராக போட்டியிடப்போவதாக நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். மக்கள் ஐக்கிய முன்னணி தனித்துப் போட்டியிடவுள்ளது.

சிங்கள மகாசம்மத பக்சேய கம்பஹா, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் மட்டும் போட்டியிடவுள்ளது.

கல் முறைமூலம் தெரிவு செய்யப்படுவர்.

முதலாம் பரிசு 500 ரூபா
இரண்டாம் பரிசு 300 ரூபா
மூன்றாம் பரிசு 200 ரூபா

9-7-94 அன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் தபால் மூலமோ அல்லது நேரிலோ கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

முகவரி;
உலகக்கிண்ண உதைபந்தாட்டம் '94
ஈழநாதம் காரியாலயம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

### வெற்றிக் கிண்ணம் யாருக்கு?
### உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி '94

1-ம் இடம்: ....................
2-ம் இடம்: ....................
3-ம் இடம்: ....................

பெயர்: ......................................
விலாசம்: ......................................
கையொப்பம்: ......................................

யாழ். ஸ்ரீதரில்

தினசரி 4.00 மணிக் காட்சியாக

உயிராயுதம்

JURASSIC PARK

தினசரி மாலை 6.00 மணி
சனி, ஞாயிறு
காலை 10.30, 6.00 மணி

மே 94 ஒளிவீச்சு
சனி, ஞாயிறு பி.ப. 2.30

(சி-9786)